KUDI ARASU. Reg. No. M. 2041

குடி அரசு

வருட சந்தா தூல் பாஸ்	ரூ 2—0
6 மாத சந்தா	ரூ 1-12
மாதிரி காட்டிற்கு	ரூ 0—6

வாரப்பத்திரிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் வரி 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் ஒன்றும் 1க்கு ரூ. 2.
மேற்பட்ட விளம்பரத்துக்கு தனி விகிதம்

வரலாறு 4 | ஈரோடு, விடை ஞாயிறு மார்கழிமீ 9க (23—12—28) | வகை 35

அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

[ரூ. 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசாயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். தினக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலேப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அரோடம் இம்மாப்பலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தூங்கோக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபாஞ்சித தங்கசேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி. நீடித்த போக சக்தியையும் சுறுசுறுப்பையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், ஸ்நானபான அனுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பல ரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரிக்கைகளும் அச்சிடப்பட்ட சுத்த பெரிய கேட்லாக் கேட்போருக்கு இலவசமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்.

1. பர்மாவிற்கு:— மூ. ச. வடிவேல பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வனாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கப் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர். & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

தண்டபாணி வைத்தியசாலை,
292, சைனபஜார், மதராஸ்

சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஜவராதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதல்வேண்டும். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்தநம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஜவராதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" காரோடு.

ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: மீக்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியும்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி தருவும்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

மதனகமம்.

(புதுச்சேரி பதிப்பு.)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிடலீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்த தென்பது யாம் கூறாமலே சண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறுது விடுத்தனம். விலை ரூ 1—0—0. வஸந்த நிலையம். ரங்கப்பிள்ளை வீதி புதுச்சேரி.

திருப்பூர் பனியன்வஸ்.

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு, பேபில்களுக்கும், இன்னும்இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லேன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கபடுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்டால் இனம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பாஸ்டியன் ஸ்டூடியோ
173. போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

டேபில் டைம்பீஸ் இனம்!!

எங்கள்ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக் செடியாரம் வாங்குகி றவர்களுக்குமேஜையின் மேல்வைக்கக் கூடிய ஒரு அழகான டேபின் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் உத்திரவாதமானது. முந்தல்கன். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்,

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்போஸ்டு, மதராஸ்.

அநேக காகூகிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாக்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணு 8 முதல் அணு 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேடலாக் இனம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சரம்பிள் பாக்கெட் ரூ 1-4-0, நாட்டு காய்கறி ரூ 2-8-0. கு. கோ. இ. காஷ்மீர சாயபு,
வெஜிடேர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் காடெங்கும் பரவிவாய்ந்த எங்கள் நிகரிலாத

"ஆனந்த குணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜகன்மோஹினி, இதுவே விசித்திர லீலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி; இதுவே ஒளிந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எல்லாம் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனம்.

நி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 502, தங்கசாலை வீதி, சென்னை.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி, கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இலவமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்தரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

குறைந்த விலை! குறைந்த விலை!!

இன்னும் ஒரே மாதம் வரையில்!

கியாதி பெற்றதும் இந்தியாவில் ஏராளமாகச் செலவானதுமான

பாக்கெட் டிடக்டிவ்

அல்லது

லீ பாக் ராவல் கோப்.



எல்லும் நூதன அமெரிக்கக்கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம்.

இக்கருவியினால் திரும்பிப்பாராமலேயே உங்கள் பின்னே கடப்பதைத் தெரிந்து கொள்ளலாம்- உமது காதலி பின்னலிருந்துகொண்டு செய்யும் செய்கைகளை அவள் தெரிந்து கொள்ளாமலேயே அறிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இத்துடன்கூடவே லீலா விநோத பிரஞ்சி போட்டோக்கள் இலவசமாகச் சேர்த்து அனுப்பப்படும். ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1—4—0. எக்காலத்தில் உன்நாட்டிலிருந்து இரண்டு கருவிகள் தருவித்தால் தபால் செலவில்லை.

நி. பான்ஹி வாட்சு அவுஸ், மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

பிராமண தர்மம் கெட்டுப் போகுமென்று பரிதவிக்கும் பார்ப்பனர்களே!

கெடாத பிராமண தர்மம் மீதி ஒன்றுமில்லையே.

கைவல்ய சாமிபார் எழுதுகிறது.

பார்ப்பார சமூகம். புத்தியும் தன் காரியத்தைத் தானே முடிக்கும் சக்தியுமுடையதாக விருக்கலாம், ஆனால் அது சங்கதிவேறு. பார்ப்பார்கள் தாங்கள் வைத் கொண்டிருக்கும் ஸ்மிருதி புராணங்களையே மற்றவர்கள் பேரிலும் சுமத்தி ஜன சமூகம் சலித்துப் போயிருக்கிறதென்பதை மறுக்க முடியாது. இந்து மதமென்றும், இந்து தருமமென்றும், அதில் பிராமண தருமமென்றும், சொல்லுவது எல்லா இந்துக்களையும் சேர்த்துக் கூட்டியே. வேதஸ்மிருதிகளைப் பார்ப்பார்களே கைக் கொண்டுப் படித்து சனசமூகங்களை ஏமப் படுத்தி இருப்பதாலும், சமூகம் அதைப் பின் பற்றுவதாலும், பஞ்சதந்திர புத்திபுடைய வர்களை உலகம் பின் பற்ற வதுவிருப்ப தாலும், பிரவுடை விவாகத்திற்கு ஸ்மிருதிகளை ஆதாரம் காட்டி பிராமண தருமத்தைக் கெடுப்பதாகு மென்று தென்னாட்டில் பல பார்ப்பார சாஸ்திரிகள் சொல்லியிருப்பதாலும், ஸ்மிருதியிலுள்ள பிராமண தருமம் பார்ப்பான் முதற்கொண்டு அதிகருக்கு விபக்தமாக தெரியாதென்று நினைப்பதாலும், ஸ்மிருதி தென்னாட்டின் ஜனங்களை இடுப்பை ஒடித்து ஏழைபடிமை பாக்கிவிட்டதை உணர்ந்தும், பிரவுடையான்பின் விவாகம் செய்ய சட்டம் ஏற்பட்டு விட்டால் மற்ற மத விஷய ஆதிக்கத்திற்கும் சட்ட முண்டாய் விட்டால் என்ன செய்வது என்கிற பயமே தென்னாட்டுப் பார்ப்பார வக்கீல்களுக்கு இருப்பதாலும், இந்த விவாகம் ஸ்மிருதியிலுள்ள வாக்கியங்களையும் உலக பிரத்தியக்ஷ அனுபோகங்களையும், பெரித்துக் காட்டியே எழுதப்படுகிறது.

சம்மதவயதுக்கமிட்டியின் முன் சாட்சிசொன்ன தென்னாட்டுப் பார்ப்பார்களில் பலர், சம்மத வயதை ஏற்றுவது பெண்டாள் பிராமண தருமம் கெட்டு விடு மென்றும், ஒத்துக்கொள்ளஸ்மிருதி இடம் கொடுக்கவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். பிராமண தருமத்தைச் சொன்னது ஸ்மிருதி. ஸ்மிருதிபார மல. தனைச் சொன்னவர்களோ அநேகர். அதில் ஒவ்வொரு ஸ்மிருதி ஒவ்வொரு காலத்திலபிமாணம். பராசர ஸ்மிருதி உருடைய பின்னர், இதிக புராணக்களைக்கை கூட்டிப் பார்த்தால் அதிஷ்டருக்கு வயது இப்பொழுது ஒரு கோடிக்குறைபாமலிருக்க வேண்டும். அதர் பின்னோயான பராசருக்கோ தொண்ணூத்மான்பதே முக்காலே மூன்று வீசலகு வதிலருந் குறையச் காரணமில்லை. இவர் எழுதின ஸ்மிருதிதான் இந்த பத்தொன்பதாவது நூற்றாண்டிற்கும் பிரமாணமென்கிறார்கள். அதை அப்படியே வைத்துக் கொண்டு அந்த பராசர்ஸ்மிருதியை பார்ப்பார்கள் எவ்வளவு தூரம் கைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கவனிப்போம். பராசர்ஸ்மிருதியில் சொல்லியிருக்கும் பிராமண தருமத்தையே படித்தும் கேட்டுமில்லாதவர்களுடன் படித்த சாஸ்திரியும் சேர்ந்து கொண்டு அந்த தருமத்தை நடத்தாமலும் தள்ளி விட்டும் உலக போக போக்கியங்களைப் பிரதானமாகக் கொண்டு ஸ்மிருதிக்கு விரோதமாக எல்லாக்காரியங்களையும் செய்கையில், பிரவிடை விவாகம் செய்தால் பிராமணதருமம் கெட்டுப் போய் விடுமென்று சொல்லுவதில் என்ன ஞாயமிருக்கிறது? வேறு ஸ்மிருதிகள் பிரவிடை விவாகத்தை ஒத்துக் கொண்டாலும் பிரவிடையாவதற்கு முன் விவாகம் செய்ய வேண்டுமென்கிற பராசர் ஸ்மிருதியைப் பிரமாணமாக எடுத்துக் கொண்டு, மற்ற "பிராமண தருமங்களை விட்டு விட்ட பிராமணர் பிராமணத் தன்மையினின்று நீங்குவதுமல்லாமல் காகமும் பாவமும் வந்து கடையாக ஒதுக்க வேண்டும்" என்று விதித்திருக்கும் பராசர் ஸ்மிருதிக்கு பார்ப்பார்கள் சொல்லும் ஞாயமென்ன? பிராமணப் பாப்பார்களுக்கு விதித்த அநேக விதிகளில் பிரவிடையாகாத பெண்ணை கலியாணம் செய்து கொள்ளுவது மொன்று. இவ்வொன்றை மட்டும் ஏற்று மற்றவைகளை விட்டு விடுவதில் பிராமணதருமம் எப்படியிலக்கும்? பராசஸ்மிருதியில் தசார காண்டமும் பிராயச்சித்த காண்டமே விதித்திருக்கிறது. அதிலும் கலியுகத்திற்கு பலமான பிராயச்சித்தம் செய்யமுடியாது என்ன பராசர் தயவால் நினைத்து வெகுவான பிராயச்சித்தம் விதித்திருக்கிறார். அதன் பிரகாரம் விட்டு விட்ட பிராமண தருமத்திற்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளுவோம்" என்று சொல்லுவதாஞல் பிரவிடையான பெண்ணை விவாகம் செய்து கொள்ளுவதற்கு ஒரு பிராயச்சித்தமில்லையா? வெளிகே ஆசைக்கு வசப்பட்டு செய்யக் கூடாத கொடுமையான பாவங்களையெல்லாம் செய்து பிராமண தருமத்தின் ஸ்திரோத்சத்தையெல்லாம் இடித்துப் போட்ட பார்ப்பார்கள் தேக தாருட்டியமான பெண்ணேடுவாழுவதற்கும் அதைக்கண்டுபலர் அவர்களைப்பின்பற்றி நடப்பதற்கும் எதுவாக இருக்கும் சம்மத வயது சமிட்சையை மோதித்தால், இதற்கு போனதும் தான் தான்னாய் ஆசியோடு தாசியாய் போனதுமான பிராமண தருமம் செட்டுப்போகு மென்றோர்கள் பார்ப்பனர்கள்.

மூனிவர்கள் வேதங்களை இடைவிடாது காண்பின்றனர், ஸ்மிருதிகளை எப்பொழுதும் சிந்திக்கின்றனர், ஆதலால்சுருதிஸ்மிருதிகள் இரண்டும் அளக்கத்தக்க அளவைகளாகவும் உலகம் அளக்கப்பட்ட பொருளாகவும் பிருக்கின்றன. இவ்விரண்டையும் இவற்றிற்கு மேற்பட்ட தருக்க மூதலிய கருவி நூலைக்கொண்டு தருக்கம் செய்பவர்களை தர்க்கிகனென்று சொல்லும் ஸ்மிருதி பிரமாணத்தைக் கொண்டு எங்களை தார்க்கிகர்கள் என்றும் பிராமண ஜீவஹிதனைத்தும் சொல்லிவிடலாம். ஆனால் பார்ப்பார்களான உங்களுக்கு ஸ்மிருதி என்ன சொல்லியிருக்கிற தென்பதைக்கீழேபாருங்கள். "எந்த வேதியன் வேதத்தை ஓதாமலே வேறு நூல்களில் மூழ்கிக்கிடக்கிறானோ அவனே மூடன், அவனே சூத்திரத்திற்குசமானவன், எந்த வேதியன் தன் சாகையை ஒழித்து தர்க்கிய சாகைகளை யடைகின்றானோ அவனைப் பெரியோர்கள் எல்லா கருமங்களிலும் சூத்திரனைப் போல் புறங்கழிக்க வேண்டும், தன் சாகை யாரால் விடப்படுகின்றதோ அவனால் வேதமே ஒழிக்கப் படுகின்றது, அவனே பிரமகத்தி செய்தவனென்று உணரத்தக்கது. இவன் எல்லோர்களாலும் நிந்திக்கப்படுகிறான்" என்னும் பராசர்ஸ்மிருதி வாக்கியத்தைப் படித்துப்பாருங்கள் அந்தப் பராசர் வாக்கியப்பிராகாரம் இப்பொழுது பிராமணனென்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பார்களெல்லாம் வேதத்தைக் கெடுத்தவர்களும் பிரமகத்தி செய்தவர்களாகவுமல்லவா ஆகிறார்கள்.

"எந்த வேதியன் வேதத்தை ஓதாமல் வேறு நூல்களைப் படிக்கிறானோ அவன் வேதத்திற்குப் புறம்பான கொடியவன். இருபிறப்பாளன் இவனோடு பேசலாகாது. விதிப்படி யார் வேதத்தை ஓதி அதன் பொருளை உணர்வதில்லையோ அவன், அவன் கால் வழியோடு சூத்திரனுக்கு ஒப்பானவனும் நிற்பதன்றி கதியையடைவதில்லை" என்னும் பராசர்ஸ்மிருதி வாக்கியத்தைப் பார்ப்பார்களுக்கு ஒப்பல்லவோ? பிரவிடையாகாத பெண்களையே விவாகம் செய்ய வேண்டுமென்னும் பராசர் வாக்கியம் மட்டும் உங்கள் லௌகீக அசரத்திற்கும்காமத்தின் முடிப்பிற்கும்பிராமண தருமமாகுமோ? கலியாணத்திற்கு முன் பிரவிடையான பெண்களை பிரவிடையாகவில்லை என்று மறைத்து வைப்பதும் பத்து வயது தாண்டின பெண்கள் பிரவிடை எங்கு ஆய்விடுமோ என்று பயந்து புஷ்டியான ஆகாரங்களைக் கொடுப்பதில் தலைகட்டி தரைவயிறு ஆகாரம்போட்டு வளர்ச்சியைக் கெடுத்தும்மனதையும்வருத்தி,வைது சுட்டு விரலையும் தள்ள விரலையும் கூட்டி முத்திரித்து ஒரு இடி இடிப்பதற்கு எந்த ஸ்மிருதி வாக்கியம் ஆதாரம்? இந்த பாவத்தை எற்றுக் கொள்ளுகிறவர்கள் யார்? பராசரா? இப்பொழுது சாட்சி சொன்ன வக்கீல்களா? சங்கரமடத்துசாஸ்திரியா? அல்லது பிராமண தருமப் இந்த பாவத்தை ஜீரணம் பண்ணி விடுமோ?

"வேதமோது தல், ஓதுவித்தல், வேள்விசெய்தல், வேட்பித்தல், தானம், எற்றல் இந்த ஆறு கருமங்களும் வேதியனுக்குரிதப்புத்தருமம். அந்தக் காரணமடக்கல், பறக்காரணங்களை அடக்கல், தமம், சத்தியம், பொறுமை, நடு நிலைமை, ஞானம், விசேட ஞானம், இவைகளெல்லாம் பிராமணனுக்கு இயற்கை தருமம்" என்று பராசர்ஸ்மிருதி விதித்திருக்கிறது. இந்த பிராமண தருமங்களை யெல்லாம் லௌகீக சுகத்தின் ஆசையால் பார்ப்பார சமூகம் அடித்து தூளாக்கி அநேக தூளாய்விட்டதே! பிராமண தருமம் இந்த மாதிரியாக ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிற தென்பதைப் பார்ப்பான் மறந்து ரொம்ப தூளாய்விட்டதே! இந்த விதமாக பிராமண தருமம் இருந்ததென்பதை நினைப்பதற்குக்கூட சாகாசம் மனோ விர்த்தியம் இருக்க மூடியாதவர்களல்லவோ பார்ப்பாரல்கீல்கள். அவர்கள் கலிட்டி முன் பிரவிடை விவாகம் செய்தால்பிராமண தருமம் கெட்டுப்போகு மென்று சொல்லும் பிராமண சார்க்கிள் எசாவதி ஒன்று கெடாமல் பார்க்கிறார்களில்லையோ பிராமணதருமம் கெட்டுப் போக வசமிருக்கும். பார்ப்பான் உயர்ந்தவன் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதை பிரவிடைவிவாகம் ஒன்றினால் நிலை நிறுத்த முடியுமா? கருமத்தாலும்தர்மசாலும்பிராமணதருமம் நிலைதிருக்கிறதென்ற சாஸ்திரம் நிச்சயப்படுத்தி விட்டது பிறப்பால்உயர்வு தாழ்வுஉண்டு என்பதைபார்ப்பான் எழுதி வைத்துக் கொண்டதே ஒழிய ரிஷிகள் சொல்லியிலை அதனிந்த சமயத்திலுமில்லை. தனை தனி இந்தஸமூகம்எற்றுக் கொள்ளாது.

மனிதனுண்டாம் வாக்குத்தண்டம் காயதண்ட, முதலியவற்றோடு கூடியிருக்கப்பட்ட புத்திரனை உயரயந்தத்தால் திருத்துதல் செய்து தர்மத்தை ஓதுவிக்கவேண்டியது பின்பு மனுஸ்மிரு தாக்களையும் ஓதுவிக்கவேண்டும் வேதியன் வேதத்தையே மூலமாக வுடையவனுகிறன். சுருதி ஸ்மிருதிவிரோதத்தில் ஒத்தவனுக, கூறப்பட்டிருக்கிறன். ஒழுக்கத்திற்கும் அவ்வாறே இம்மூன்றையும் வேதியன் எப்போதும் உணரத்தக்கதுதான்று வேதங்களும் அவற்றின் அங்க நூல்களும் உபாங்க நூல்களும் பதங்களும் கிரமங்களும் ஓதி ஸ்மிருதியை ஓதவேண்டும். முதலில் வேதத்தைப் பெறவேண்டும், பின் விசாரித்தல் வேண்டும் ஓதிப்பலகாலும் பயிலவேண்டும், அவ்வேதமந்திரங்களை ஜெபிக்கவேண்டும், என வேதமோதலும் ஓதுவிக்கப்படும். இவ்விதம் ஓதுதலே பிராமண தருமத்திற்கு முன்நிபந்தனையாக பராஸ ஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது. இந்தவிதியை அனுசரித்த பிராமண தருமத்தை நிலைநிறுத்தும் பிராமண சமூகமுண்டா? ஐந்து வயதிற்குள் ஆரம்பிக்கவேண்டிய எழுத்தறிவித்தல், பதினைந்து வயதில் முதல் ப

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

இதிகாசங்கள்.

இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(8-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

திருமாலே வழிபட்டிருந்த கோசலை பல நாளாகக்காணுத இராமனை எதிர் கொண்டழைத்து "வாக்குத்தவறாதவராகிய உன் தந்தை உனக்கு இன்று முடிசூட்டுவார். நீ இங்கேயே உண்ண வேண்டும்" என்று ஓர் இருக்கையில் அவனை உட்காரச்சொன்னாள். இராமன் அதில் இருக்காமல் வெட்கத்துடன் "அம்மா! உனக்கும், சீதைக்கும், இலக்குவனுக்கும் துக்கத்தைக் கொடுக்கும் ஒரு பெரிய பயம் சேர்ந்திருக்கிறது. தந்தை என் முடிசூட்டை நிறுத்திவிட்டார். பரதனே இளவரசாகப் போகிறான். நான் பதினான்காண்டுகள் காட்டில் வாழக்கட்டளையிட்டிருக்கிறார். இதோ புறப்படப்போகிறேன். மாமிசத்தை விலக்கி காய் கனிகளைத்தின்று காட்டில் வாழப்போகிறேன். ஆதலின் இந்த இரத்தின ஆசனம் எனக்கு இப்பொழுது தகாது" என்று கூறினான். அதைக்கேட்ட கோசலை உணர்ச்சியற்றுக் கீழே வீழ்ந்தாள். இராமன் அவளைத் தூக்கினான். அவள் உணர்ச்சி வந்து இலக்குவன் கேட்டுக்கொண்டிருக்க "இராமா! எனக்கு ஒரு வரும் படாத துக்கம் எற்பட்டிருக்கிறது. நான் அரசனுடைய முதல் மனைவி. இருந்தாலும் எனக்கு அதற்குரிய செல்வம், சுகை, அதிகாரம் ஒன்றும் கிடையாது. மன்னனும் என்னை வெறுக்கிறான். உன் மேலுள்ள அன்பால் அவன் என்னையும் நேசிப்பான், அதனால் அதிகாரம் பெறலாம் என்ற ஆசையாலேயே இதுவரை உயிர்வைத்திருக்கிறேன். இனி இதவிடத் துக்கத்தை அடைய வேண்டியிருக்குமே. இயற்கையாக நான் அனுபவிக்கவேண்டிய சுகம் எனக்கில்லை. என் சக்களத்திகள் இனிமேல் என் மேல் பிரியத்தைக் குறைக்கக்கூடிய வார்த்தைகளை மன்னனிடம் தெளிவாகக் கூறுவார்கள். 'என்னுடைய கணவனுக்கெதிரே நிற்காதேபோ' என்பார்கள். மன்னன் என் வீட்டிலிருக்கும் போது 'இங்கே உனக்கென்ன வேலை. என் அந்தப்புரம் போவோம் வா' என்று பலாத்காரமாக அவரைக் கையைப் பிடித்து இழுப்பார்கள். பெண்களுக்கு இதை விடத் துன்பம் உண்டோ? என் துக்கத்துக்கும் அழுகைக்கும் எல்லை இல்லை. நீயும் காட்டுக்குப் போய் விட்டால் நான் என்ன செய்வேன்? நீ பிறக்க பதினேழு ஆண்டுகளாய் தன்பங்களையெல்லாம் பொறுத்திருக்கிறேன். இனி மேல் எல்லோரும் என்னை அவமதிப்பார்களே. எனக் கோ லையதும், பலரும், அழகும் போய் விட்டன இனி மன்னர் என்னை விரும்பக்காரணமில்லை. என் எண்ணமெல்லாம் வீணாயினவே. உன்னையும் பிரிந்து அவமானப்பட்டு உயிரோடிரேன்" என்று வாய் விட்டு அழுதாள்.

அதைக்கேட்ட இலக்குவன் "ஓர் பெண்ணிடத்தில் காம பரவசனாயிருக்கும் விபரீத புத்தியுடைய விவேகமற்ற மன்னனுடைய பேச்சைக் கேட்டு தனக்கு நியாயமாகக் கிடக்கவேண்டிய காட்டைவிட்டுப் போதல் எனக்கும் தகுந்ததாகத் தோன்றவில்லை. காமப்பித்தேறியிருக்கும் மன்னனுடைய சொல்லை அரசநீதி தெரிந்த எந்த மகனாவது கவனிப்பானா? ஆதலால் அண்ணா! உடனே வில்லை யெடுத்து இந்த காட்டைக் கைப்பற்றும். பரதனுக்கு வேண்டியவர்களை யெல்லாம் நாசஞ் செய்து விடுகிறேன். எமது தந்தை கைகேயியால் ஏமாற்றப்பட்டு எமது பகைவர்களுக்கு உதவி செய்தால், அந்தத் தீவினை என் நிறையில் வைக்கக்கூடாது, என் கொல்லக்கூடாது? இதுவே மறுதீர்ப்பும், உம்மையும் என்னையும் பகைத்துக்கொண்டு இலால் இந்த அரசைப் பரதனுக்குக் கொடுக்க முடியுமா? தான்கள் பதின்பத்தை என் வீரியத்தால் அழிக்கிறேன்" என்றான். உடனே கோசலை "இராமா! தம்பி சொன்னது காதில் விழுந்ததா? தந்தை கட்டளையைவிடத் தாயின் சொல்லே மிகவும் மேலானது. ஆதலின் நீ காட்டுக்குப் போவதில் எனக்கு விருப்பமில்லை. நீ என் கட்டளையை மீறிக் காட்டுக்குப் போனால் நான் உயிரை விட்டுவிடவேன். முன் காலத்தில் சமுத்திர மன்னன் தன் தாய்க்குத் துக்கத்தை உண்டுபண்ணின பாபத்தால் பிராமணனைக் கொன்றவர்கள் அடையும் நரகத்தை அடைந்தான். நீயும் இந்த லோகத்தில் என்றும் அழியாத துக்கத்தை அடைவாய்" என்றாள்.

இராமன் "அம்மா! தந்தை கட்டளை முக்கியது. ஆதலின் அதையே நான் முதலில் நிறைவேற்றவேண்டும். முன் தந்தை சொல்லைக்கேட்டுக்கண்டு முனிவர் பசுவைக்கொன்றார்; டரசுராமர் தாயையே கொன்றார். ஆதலின் தந்தை சொல்லே சிறந்தது" என்றான். பின் இராமன் "தம்பி! இலக்குவா! தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதே கடமை. ஆதலின் நமது சதப்பனுயிருந்தாலும் அவரைக்கொன்று நாடாளுவோம் என்ற கேவலபுத்தியை விட்டுவிடு" என்று தம்பியிடம் கூறி பின் தானையப் பார்த்து "பதினான்கு ஆண்டுகள் காட்டிற் போயிருந்து பின் உமது அருகேயிருந்து பணிவிடை செய்வேன். ஆணையிட்டுச் சொல்கிறேன், எனக்கு விடைதர வேண்டும்" என்றான். மறுபடியும் கோசலை "நான் உத்தரவு தரமாட்டேன். உன்னைப் பிரியேன்" என்றாள். அதனால் இராமனுக்குக் கோபம் உண்டாயிற்று. அவன் "தம்பி! நமது தந்தை நமக்குப் பெரியார்; அரசர். அவர் சொல்லைத் தட்டக்கூடாது. அவர் இருக்கும்போது என் தாய் கணவனை இழந்தவளைபோல என் கூட வரலாமா? தம்மா! எனக்கு விடைதாரும்" என்றான். பின் அவன் "தம்பி! நான் காட்டுக்குப் போகத் தீர்மானித்து விட்டேன். என்னுடைய எண்ணத்தை மாற்ற முடியாது. எல்லாம் தெய்வச்செயல். என் கையிற் கிடைத்த அரசாட்சி தவறிப்போனதும் என்னிடத்தில் தனவிலா அன்பு வைத்திருந்த கைகேசி மனம் மாறினதும் தெய்வச் செயலே. அதை எதிர்க்கயாராலும் முடியாது. நமக்கு நாடு கிடைக்காமைக்காக வருந்தாதே" என்று புகன்றான்.

இலக்குவன் மிகச்சினத்தோடு "தன்னை! வீர மற்றவர்களும், பித்தேறியவர்களும் பேசுமாறு விதியின் பெருமையைப் பேசினீர். தங்களுக்குக் கேடு சூழ்ந்த அற்பப்பாபிகளான கைகேசி தசரதர்களின் சூழ்ச்சி உமக்குத் தெரியவில்லையா? மூத்தமகனுகிய உமக்குக் கிடைக்க வேண்டிய அரசாட்சியை பரதனுக்குத்தர அவர்கள் செய்த சூழ்ச்சி இது. 'நான் இராமனுக்கு முடி சூட்ட ஆரம்பிக்கிறேன், அப்போது நீ தடுத்து விடு' என்று தசரதன் கூறிய சூழ்ச்சியே இது. தங்களுக்குச் சித்தப் பிரமையே தவிர வேறில்லை. சமத்துக்கு அடிமையாகிய தவர்கள் வார்த்தைக்கு யார் தான் கட்டுப்படுவர்? விதியை நமது முயற்சியால் வெல்லலாம். தேவரீயாயினும் மானுரேயாயினும் தங்களுடைய முடி சூட்டைத் தடுக்க முடியாது. கைகேசி தசரதர்களையே காட்டுக்குத் தூரத்துகிறேன். நமது தந்தை நிலையான மனமுடையவரல்ல அரசாட்சி அடிக்கடி மாறுமென்று தங்களுக்குத்தச் சத்தியமுண்டாகி தங்களுக்கு அரசாட்சி வேண்டாமென்றால் நானே அரசாட்சியை ஏற்றுக்கொண்டு நாட்டைக்காப்பாற்றுவேன். துகலின் இப்போதே முடி சூட்டிக்கொள்ளுதலில் மனதைச் செலுத்தும். எனது திறமையை இன்றே காண்பீர். நமது தந்தையின் அதிகாரத்தை அவரிடத்திலிருந்து பிடுங்கித் தங்களுக்குக் கொடுக்கப்போகிறேன், தடைசெய்வோன் இந்திரனேயாயினும் கொல்வேன்" என்றான். இராமனே "தம்பி! பொறுமையாயிரு. பெற்றோர்கள் சொல்லைத்தட்டக் கூடாது. நான் எப்படியாவலும் காட்டுக்குப் போகிறேன்" என்று கூறினான்.

கோசலை "அப்படியானால் நானும் உன்னுடன் வருவேன்" என்றாள். இராமன் "கணவனுக்குப் பணிவிடை செய்வதை விட்டு என்னுடன் வருதல் கூடாது" என்றான், கோசலை அவனைக்காட்டுக்கனுப்பவும் தான் அயோத்தியிலிருக்கவும் இணக்கினாள். தன் சக்களத்திகளின் கொடுமையை நினைத்து மறுபடியும் தன்னை அவனுடன் அழைத்துப் போகவேண்டுமென்றாள். அப்போது இராமன் அழுதுகொண்டு "சக்களத்திகள் தங்களுக்குக் கேடு செய்ய நியாயமில்லை. பரதனும் நல்லவன், தந்தையோ கிழவர். என்னைப் பிரிந்ததால் ஏற்படும் துக்கத்தால் அவர் இறக்காமல் நாங்கள் பாதுகாக்கவேண்டும். அவருக்குப் பணிவிடை செய்து கொண்டு நான் திரும்பிவரும் காலத்தை எதிர்பார்த்திரும்" என்று சொன்னான். கோசலை அவனை வழி அனுப்புவதற்குச் செய்ய வேண்டிய ஒமங்களைச் செய்யத்தொடங்கினாள். தேவதைகளை வேண்டினாள். பின் ஓர் பிராமணனால் ஓமம் வளர்த்து வேண்டிய அளவு காணிக்கைப் பொருள் கொடுத்தாள். பின் இராமனை வாழ்த்தி வழி அனுப்பினாள்.

இராமன் சீதையிருக்குமிடம் வந்தான். அங்கே தன் பரிவாரங்கள் தன்னுடைய முடி சூட்டு ஒக்காகச் செய்து கொண்டிருந்த அலங்காரங்களையும் அவர்கள் மகிழ்ச்சியையும் பார்த்து வெட்கத்தால் சற்றுத் தலைகுனிந்தான். தன் கணவன் துக்கத்தால் வாடின முகத்துடன் கவலையால் இந்திரிய சுவாதீன மின்றி வருவதைக் கண்டு சீதை இருக்கையிலிருந்து திடீரென்று எழுந்து, 'நமது கணவன் எப்பொழுதும் போலில்லாமல் கவலையோடு தலைகுனிந்து என் வருகிறார்' என்று நினைத்து நடுங்கினாள். இராமனுக்கு இதுவரையில் வருத்த மென்பதே கிடையாது. அடக்க முடியாத கவலையோடும் அவன் தன் மனைவியைத் தழுவி தான் பிரிந்தால் சீதை என்ன பாடு படுவாளோ என எக்கம் மேலிட்டான். முகத்தில் ஒளி குறைந்தது. 'கையில் கிடைத்த அரசாட்சியையிழந்தேன். தானும் காட்டுக்குப் போகவேண்டியதாயிற்று' என்று எப்படிச் சொல்லுவது என்ற சோகத்தால் உடம்பு வியர்த்தது. தன் மனதிலுள்ள கவலையை அவளை அடக்க முடியாதவனைக் கண்டு சீதை "முடி சூட்டானதிற்கு அடையாளமான குடை, சாமரை, தேர் முதலியன ஒன்றுமின்றி கவலை கொள்வதற்காரணமென்ன" என்று புகன்றாள். இராமன் அவளுக்கு நடந்ததைச்சொல்லி "நான் பதினான்காண்டு காட்டில் வாழப்போகிறேன். நீ பரதனிடம் என்னைப் புகழாமல் அவன் மனப்படி நடந்து கொள்ளவேண்டும். அரசர்களுடைய மனப்படி நாம் நடந்துகொண்டால் அவர்கள் நம்மேல் தயவுவைப்பார்கள்' என்று கூறினான்.

சீதை கோபங்கொண்டு "இராமா! இவ்வளவு அற்பமான வார்த்தைகள் உமது வாயிலிருந்து வந்ததேன்? தாங்கள் என்னை அழைத்துக்கொண்டு போனால் தங்களுக்கு சுகமே யொழிய துக்கமில்லை. பாலவனத்தில் பிரயாணம் செய்கிறவர்கள் தங்களுக்கு வேண்டிய தண்ணீரைக் குடித்து விட்டு மிருக்கத்தைக் கொட்டமாட்டார்கள். பிறகு வேண்டியிருக்குமென்று கொண்டுபோ

(இதன் தொடர்ச்சி 17ம பக்கம் பார்க்க.)

கொடிய வழக்கம்.

(முதியோர் எழுதுவது)

கொடிய வழக்கம் மடியும்வரை விடாதா? கொடிய வழக்கங்கள் பலவுள. கணவனைத் தெய்வமாகத் தொழுக. கணவன் எச்சிலை யுண்க. கணவன் தூங்கினபின் தூங்குக. கணவன் அடித்தாலும் படுக. கணவன் பெயர் கூறற்க. கணவனுடன் சமமாக உறையற்க. கணவன் சொல்லே வேதமெனக் கொள்க." இத்தகைய முதுமொழிகள் புகலுவதை அடிக்கடி செவிமடுக்கின்றோம். இவையனைத்தையும் உடம்பாடாகப் பெண்கள் நடந்து வருவதற்குக் காரணமென்ன? "பிள்ளைகளைப் பெறுதபெண்கள் வாழ்வு சொல்லையாம். கணவனைப் பெறுத பெண்கள் கடையகத்தார்களே. கணவன் வருவாயால் கன்மனிகளின் குலுக்கும் பிலுக்கும் பெருகும். பெண்கள் அடுக்களைச் செல்வமேயன்ற அவையேறு முரிமை பெற்றவரல்லர்" இவைபோன்ற எண்ணங்களே பெண் மக்களின் தாழ்ந்த நிலைமைக்கு மூலம். கல்வி, கற்பு இரண்டு மொரு பொருட் கிளவிகளே. பெண்மக்களும் ஆடவர்களைப் போன்று படித்து வருவார்களானால் அஞ்ஞர் அறியாமை ஞாயிற்றைக்கண்ட பனி போன்று தொலையும். தங்களுடைய கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பது மன்றி தங்களுடைய வுரிமைகளையும் நிலை காட்டுவார்கள். ஔவையுதலான பெண்ணாடகங்கள் போல் கல்வித் தேர்ச்சியுற்றவராய் அவைகட்கு அணியாய் ஆடவர்களுக்கு வருமைத் துணையாய் மக்கட் பேறற்றவராய் மக்களை கல்லொழுக்கில் நடம்பட கடத்துபவராய் விளங்குவரென்பதில் ஐய முளதோ? ஆதலால் பெண் கல்வி அனைத்தைச் செய்தல் ஆடவர் முதற் கடமையாம். பெண்களை அகவிருளிற் புதைத்தும் கொடிய வழக்கத்தை யுடனே கைவிடல் தக்கதாகும்.

சிறு வயதில் பெண்களை மணஞ் செய்து கொடுப்பதும் சிறுவயதில் பெண்கள் கைம்மை நிலையடைவதும் ஆகிய கொடிய வழக்கங்கள் தமிழ் நாட்டிற் கிடையா. கிடைக்குமாயின் இடைவழிப் புகுந்தனவேயாம். ஆரிய வெழுத்துகளுள் சிறந்தன வென்று கருதி அக்கொடிய வழக்கங்களைக் கைக்கொண்டவர் அங்கொடிய தன்பங்களுக்கும் அருகராவாரல்லரே? சிறு கைம்பெண்களன்றி கடுவயதில் கைம்மை நிலையுறுவர் நிலைமை யென்ன? பரிதாபம்! ஆடவருக்கு ஒரு நீதி, மடவர்களுட் கொருநீதியா? ஒரு வருப்பாருக்கொரு நீதி யென்று பல நீதிகளையுணர்த்தும் நூல்களியாம் கண்டிக்கவிலையோ? அவற்றைக் கண்டிக்கும் யாம், ஆண் பெண் இருவருக்குப் வாழ்க்கை நல வேறுபாட்டைக் கைப்பிடித்தலெங்ஙனம்? காமமிருபாலாருக்கு முளதெனின் "ஆடவர் காமம் கடல் போற் பெருகி எக்கும் பொழியவும் பெண்கள் காமம், கணவனியழந்த நிலைமையிலும், அடங்கியிருத்தலும் வேண்டும். அஞ்ஞர் வேறு மணஞ் செய்தலாகாது" எனின் அது நடுவு நிலையாமா? ஒரு மனைவி இருமனைவி மும்மனைவி பலமனைவிகளையுடைய ஆண்மகன் சாவானுயின் அம்மனைவிகள் ஆயுள் முடியும் வரை தனி நிலையில் தூண்புறுதல் எப்படி?

ஆண்மகன் இறந்தவுடன் கழுத்திற் கட்டியதாலியைக்கழற்றி விடுகின்றனர். இச்செயலின்கருத்தென்னே? இருவருக்குமுள்ள கட்டுப்பாடுநீங்கிற்றென்பதேயதன் பொருளன்றே? அங்ஙனமிருக்கமறுமணவுரிமை பெண்களுக்கில்லை யென்பதும் அவர்களைக்களவழியிற்செல்லாதவாறு காத்தல் கடமை யென்பதும், களவழியிற் சென்றுரைக் கடிதல் சரியென்பதும் அருட் செயலாகுமா? "தாழ்ந்த வகுப்பார்"களில் சிலர் புருடனிருக்கும் பொழுதே அவனை விட்டு நீங்கி யாற்றொருவனை மணப்பதும், புருடனை யிழந்த பெண்டிர் வேறு கணவனை வரித்தலும் வழக்கமாயிருப்பதைக் காண்கின்றோம். மேல் வகுப்பார், மேலோர், என்ற பெயர்களைத் தரித்தவர் மட்டுமே கொடிய ஆரிய வழக்கத்தைக்கையாடுகின்றனராதலின் அவர் மேலோராகார். மேற் பிறந்தும், நலான வொழுக்கங்களைக் கைப்பற்றியும் யாது பயன்? "அமங்கலியைக்காண்டலுந் தீது, அமங்கலியுடன் பேசலுந்தீது, அமங்கலி சொற்கேட்டலுந் தீது, அமங்கலியுடனிணங்கியிருத்தலுந் தீதெனின் அமங்கலிபின் கதியென்னை? ஞாணிட்டு உயிர்துறத்தலே நலமுடைத்தாம்,

தீண்டாமை, சாயல் படாமை என்ற கொடிய வழக்கங்கள் பார்ப்பனர்களிடமே பெரிதுங்காணப்படுகின்றன. அவர்களில் முண்டச்சிகள் செய்யும் ஆர்ப்பாட்டம் அதிகம். பார்ப்பனரைப் பிடிப்பற்றி சிற்சில உயர் வகுப்பினரென்று பெருமை பாராட்டும் மக்களும் ஒழுகி வருகின்றார்கள். 'பிறப்பொக்கு மெல்லாவுயிருக்கும்' என்ற கபிலனுரை 'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா' தென்றனர். சிறப்பு என்பது சிறந்த வொழுக்கம். அகத்தூய்மை புறத்தூய்மை சிறக்கச் செய்யும். புறத்தூய்மையாவது முழுகுதல், குளித்தல், தூய ஆடையணிதல், வீடுகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ளல், கண்டவிடங்களில் துப்பாதிருத்தல், சுகமுகலியவற்றைப் பற்களால் கடித்தல், எச்சில் செய்யாதிருத்தல் முதலானவையாம். ஒரு குடும்பத்திற் பிறந்த மக்களுள் சிலர் தூயராயும் சிலர் தூய்மையிலாதவராயுமிருப்பின் பின்னவரைப் பெற்றோரும் வெறுத்தலிபல்பே, அவரைத் தீண்டவுஞ் செய்யார். தாழ்ந்த மக்களெனப்பட்டவருள் சிலர் புனிதமாகவும் நல்லொழுக்கமாகவும் இருக்கின்றார்கள். அண்ணலைக்காணில் மனமுகமலர்ச்சியுடன் பேசுவதைப்பார்க்கலாம், அன்னாருடைய உற்றார் உறவினர் தூய்மையிலாதவராயின் அவருடன் பழகுந் தூய்மையுற்றாரும் கண்கு மதிக்கப்படுவதில்லை. பழக்கங்கொடிது. கொடிய விலங்குகளைக் கண்டு விலகிப் போவது போல் "பள்ளர் பறை' முதலானவர்களை மக்களென்றெண்ணுமல் திட்டுதலும் வைதலும் பத்தடி இருபதடி விலகுமாறு கூவுதலும் அறிவின்மை மட்டுமன்று, புல்லறிவாண்மையேயாம்.

மற்றொரு கொடியவழக்கங்கூறுதும். கிராமணிகள் வடசில்லாக்களில் தேவாலயங்களுட்சென்று வணக்கஞ்செய்து வருகின்றனர். சில விடங்களில் நாடார்களென்ற ஏதேமக்களுக்குத் தேவாலயம் புகுமுரிமை மறுக்கப்பட்டுளது. பல்லதுறை மன்றங்களில் ஆலயம்புகும் வழக்குகள் விருதுபட்டி, மதுரை, திருச்செந்தூர் முதலான கோயில்கள் சம்பந்தமாக நிகழ்ந்தபொழுது வழக்கத்தை அனுசரித்து சிலவகுப்பார்கள் புகலாகாது என்று முடிவு கூறப்பட்டுளது. செக்கு வாணியர்கள் திருச்செந்தூர் கோயிலுள் போகலாமென்றுசெய்த தீர்ப்புக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் இக்கியகிறித்தவ நீதிபதி அப்பீப்பிராயங்கூறியதாகக்கேள்வி. இக்கொடுமைகளுக்குக்காரணம் தூரைத்தனதார் மதவிஷயமாகத் தலையிடுவதில்லை யென்ற மேனோக்கமே. இதுகாரணம்பற்றி விலகியிருப்பதால் ஆலயவழக்குகள் செழித்துவருகின்றன. ஆலயவுரியங்கள் வக்கில்கட்கு இரையாகின்றன. அனைவரும் கோயிலுட் புகலாம், வணங்கலாமென்றால் கலாம்மீனையா, ஐக்கியமேற்படும். சகோதரபான்மையிலானமக்களும் அடிமூடி பார்ப்பனீயமேயாம். கோயிலுள்ளும் பார்ப்பனீயம், ஆசமன்றங்களிலுள்ளும்பார்ப்பனீயமென்றால் எனையமக்கள் முன்னேற்றமடைதல் எவ்வாறு கூடும்.

பாடசாலைகளிலும் பார்ப்பனீயம்,பள்ளிக்கூட உபாத்திமார்களில்பெரும்பான்மையார் பார்ப்பனரே. சிறுபான்மையாயுள்ள ஏனைய பிள்ளைகளின் பெற்றோருற்றோர்களே பள்ளிக்கூடச் செலவுகட்கு உபகாரஞ்செய்துவருபவராயினும் அவ்வுபாத்திகள் பார்ப்பனச் சிறுர்களிடத்தும் விதமென்றே, ஏனையர்களை நடத்தும்விதம் வேறேயாம். முன்னவரிடங்கண்ணோட்டமும்பின்னவரிடம் வெறுப்பும் வன்சொல்லுமிகழ்தலவதை காடோறுங் காணலாம். காற்பதாண்டுகட்கு முன்னர் யான் கல்லூரியிற் கற்றுவந்த பொழுதுவேளாளப்பையனொருவனுக்குக் கணக்கில் முதன்மார்க்குக் கிடைத்து அவனுக்கு அடுத்ததாகில் பார்ப்பனச்சிறுவனொருவனுக்கு ஐந்துமார்க்குக் குறைந்திருந்தது. தகுவர் களங்கமற்ற ஆங்கிலவன் பரிசுப்பன்று பரிசு பார்ப்பனப் பையனுக்கே கிடைத்தது. அனைவரும் பார்ப்பனீயக் கொடுமையை இகழ்ந்தனர். மயான வைராக்கியம், பிரசவ வைராக்கியம் என்றுற்போல சில வைராக்கியப் பேச்சுகள் அச்சமயம் நிகழ்ந்தனவேயன்றி வேறிருன்றும் நடைபெறவில்லை. மார்க்குகளைத் திரித்தலாகிய கொடியவழக்கம் நாளுக்குநாள் வளர்பிறைபோன்று வளர்ந்தே வருகின்றது.

பார்ப்பனனல்லாத வொருவன் நீர் வேட்கையால் நாவறண்டு நீர்கேட்பின்சஷமாய் விடுப், பசிப்பிணியுற்றவன் சிறிதண்வு வேண்டுமென்று பரிந்து கேட்பினும் சேஷமாய் விடுமென்று கூறி நீர்கொடாமலும உணவளியாமலும் தன்னலம் பரிக்கும மக்கள் மக்களாவாரோ, மக்கட் பதடியாவாரோ, கூறுதிர். கருணை சிறிதுமில்லாத இக்கடினநெஞ்சத்தாருக்கு நாம் கருணை காட்டுதலெங்ஙனம்? இறைவனை பழிப்பதாற் பயனில்லை. தத்தங்குறைகளை தாக்காமே நீக்குலவறி அவைநீங்கா. ஆதலின் கொடிய வழக்கங்கட்கு உட்பட்டிருப்பவர் தாமேமுயன்று அவற்றையொழிதலே தகைமையாம்.

வேதத்திற்கும் புராணங்களுக்கு முள்ள வித்தியாசங்கள்.

மதராஸ் ஆரிய சமாஜத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் எழுதுகிறார்:

வேதமானது ஓரே கடவுளைத் தொழச் சொல்லுகிறது. புராணங்கள் நானு வகையான தேவதைகளையும் விருக்ஷாதிகளையும் பூஜிக்கச் சொல்லுகின்றன.

வேதமானது, வேதத்திலுள்ள சத்ய வாக்கியக்களுக்கு அனுகூலமாக நடந்து பாவத்தினின்று விலகி நிற்பதனால மோக்ஷம் பெறலாமேயொழிய வேறு வகையில்முடியாதென்கிறது புராணங்கள், எவ்வளவு பாவம் செய்தபோதிலும் ராமா, கிருஷ்ணா என்ற இறந்து போன அரசர்களின் பெயரைச் சொன்னமாத்திரத்திலும், துளசிச் செடி, சாலிக்ராமக்கல், முதலியவற்றைப் பூஜிப்பதனாலும் மோக்ஷம் சேலாமெனச் சொல்லுகின்றன.

அவரவர்கள் செய்த கருமங்களுக்குத்தக்கபடி புனர் ஜென்மம் கிடைப்பதாக வேதங்கள் கூறுகின்றன. புராணக்கள், இறந்தவர்களின் புத்திரர்கள் பார்ப்பனனுக்குப் பசுதானம் செய்வதனால் இறந்தவர்களுக்கு உயர்ந்த ஜென்மம் கிடைப்பதாகக் கூறுகின்றன.

ஸ்திரீ, புருஷர், அடிமை, வேலைக்காரர், சூத்திரர் முதலிய யாவரும் வேதத்தைப் படிக்கலாமென யஜுர் வேதம் (அத் 26) (மக் 2 ல்) சொல்லியிருக்கிறது. புராணங்கள், ஸ்திரீகளைச் சூத்திரர்கள் மூட்டாள்கள் எனக்கட்டி அவர்களைப்படிக்கக் கூடாதென்கின்றன.

வேதம், பிரம்மச்சரியம், கிரஹஸ்தாஸ்ரமம் வானப் பிரஸ்தம் சன்னியாசம ஆகிய ஆஸ்ரமங்களை ஒவ்வொருவரும் ஆசரிக்கவேண்டுமெனச் சொல்லுகிறது. புராணங்கள் (அஸ்டவர்ஷோபவேத் கௌரீ) என்னும் பொய் வார்த்தையை அனுசரித்து பாலிய விவாஹம் செய்யச்சொல்லுகிறது.

வேதமானது, பிரம்மச்சரிய ஆசிரமத்திற்குப்பின் வரனுடைய குணகர்ம ஸ்வபாவங்களுக்குத் தக்க பெண்ணைப்பார்த்து மணமுடிக்கச் சொல்லுகிறது: புராணங்கள், ஒன்றும் பார்க்கவேண்டாம், ராசிப்பொருத்தங்கள் போதுமென்கின்றன.

பிரம்மயக்ஞம்—சந்தியா செய்தல், தேவயக்ஞம்—அக்னி ஹோத்ரம், பிதிர்யக்ஞம்—பெற்றோரைப் பேணுதல், அதிதியக்ஞம்—அதிதிகளை ஆதரித்தல், பலிவைஷ்பதேவ—வாயில்லா ஜீவன்களை ரக்ஷித்தல் ஆகிய நித்திய கிரியைகளாகியபஞ்சமஹாயக்ஞங்களை வேதம் செய்யச்சொல்லுகிறது.புராணங்கள், கல்லையும் கட்டையையும் வைத்துப் பூஜை செய்தும், அவற்றிற்குக் கலியாணங்களை செய்தும் பலவித வேடிக்கைகளைச் செய்து பார்க்கச் சொல்லுகின்றன.

வேதமானது, சூத்திரனென்று ஒருவர் கிடையாதெனவும் எல்லோருக்கும் ஓரே விதமான பிரம்மகாயத்திரியைச் சொல்லிக் கொடுக்கவேண்டுமெனவும் சொல்லுகிறது. புராணங்கள், 24 வகை காயத்திரியையும் மூன்று வேளை சந்தியாவையும்காட்டுகின்றன.

வேதமானது அவனவன் குணகர்மஸ்வபாவத்திற்குத் தக்கபடி வர்ணத்தைர் ஏளிக்கிறது. புராணங்கள் ரீசத்தொழில் புரிந்தபோதிலும் பிராமணன் பிள்ளை பிராமணனே என்கின்றன.

வேதமானது, மது, மாமிசம், கூடாதென்கிறது. புராணங்கள், பஞ்சம் செய்து பசுக்களையும் குதிரைகளையும் தின்னச்சொல்லுகிறது. இன்னும் தேவதைகளுக்கு மதுமாமிசம் படைத்துப் பூஜித்துத்தின்னச் சொல்லுகிறது, புராணக்கடவுள்களும் மாமிசம் தின்கிறார்கள், ராமனும் மாமிசம் தின்றான்.

வேதமானது, பதியின் சேவையே பெண்களுக்கு மோக்ஷம் சேர்வதற்கேற்ற வழி என்கின்றன. புராணங்கள், மாங்களின் பூஜை, கங்கை ஸ்நானம், உபவாசம் ஆகியவற்றை மோட்சத்திற்கு வழிபோகக் காட்டுகின்றன,

வேதம், தீர்த்தமெனபதற்கு உத்தமர்களின் சேர்க்கை என்கிறது. புராணங்கள் ஆறுகளைக் காட்டுகின்றன.

வேதமானது, சத்தியமான நியமப்படி நடப்பதைத் தவமென்கிறது, புராணங்கள், கட்டைகளை எரித்து அதனருகில் உட்காருவதைத் தவமென்கின்றன.

வேதமானது, கடமைகளைக் காப்பாற்றுவதையே விரதமென்கிறது. புராணங்கள் பட்டினியை விரதமென்கின்றன.

வேதம், அயல் புருஷர்களுடன் பெண்கள் தனிமையாகப் பேசக் கூடாதென்கிறது, புராணம், பெண்களைகுருக்களிடம் தனிமையாச்சென்று தனிமையானஇடத்தில்உபதேசம் பெறச் சொல்லுகிறது.

வேதமானது, பூரண பிரம்மச்சரியம்,யோகம், முதலியவற்றால் ஒரு மனிதன் அதிகத்திலும் அதிகம் நானூறு வருடங்கள் உயிரோடிருக்கலாமென்கின்றது, புராணங்கள், இவையொன்றையும் செய்யாமலே ஆயிரம் கோடிவருஷம் சில மனிதர்கள உயிரோடிருந்ததாகச் சொல்லுகின்றன.

வேதம், கடவுளைச் சர்வசக்திமான், அவர் தம் அபார சக்தியினால் எதைவேண்டுமானாலும் செய்ய வல்லவர், இறப்பும் பிறப்புமற்றவர், மாறுதலற்றவர், எண்ணும் உள்ளவர் என்கிறது. புராணங்கள், கடவுள் பிறந்தார், இறந்தார், அழுதார், புலம்பினர், கதறினர், பன்றி, ஆமை, மீன், முதலிய ஜென்மங்களாகப் பிறந்து பக்தர்களைக் காப்பாற்றினர் என்கின்றன.

வேதமானது, ஒரு பெண்ணை ஒரு ஆணும், ஒரு ஆணை ஒரு பெண்ணும்தான் விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்கிறது. புராணங்கள், ஒரு பெண்ணுக்கு ஐந்து புருஷர்களிருந்ததாகவும் கிருஷ்ண மகாராஜனுக்கு 16108 கோபிகள் பெண்ஜாதிகளாகபிருந்ததாகவும் சொல்கின்றன. இப்படி நம்கடவுள்களே செய்து வருகையில் மனிதர்கள விபசாரம் செய்வதை நிந்திப்பானேன்? எனவே புராணங்களைத் தீயிட்டுக் கொளுத்தி எறியுங்கள்.

16-வது செங்குந்தர் மகாநாடு.

செங்குந்தர் மகாஜன சங்கத்தின் 16வது மகாநாடு 1928வது டிசம்பர்மீ 29, 30-ந் தேதி சனி, ஞாயிறு தினங்களில் கோவைக்கடுத்த திருப்பேரூரில் நடத்தவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் N. சுப்பிரமணிய முதலியார் உபசாரணைத் தலைவர். மகாநாட்டு பிரதிநிதிக் கட்டணம் ரூ. 1—8—0: உபசார சபைக் காரியதரிசிக்கு முன்னடியே அனுப்பவேண்டும்.

சைவசித்தாந்த சபை தூத்துக்குடி,

இச்சபையின் 45 ம்ஆண்டு நிறைவுவிழா, நிகழ் டிசம்பர் 29, 30 ஆம் நாட்களில் நடைபெறும்.

சென்னை "நவசக்தி" ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியான சுந்தரமுதலியார் அவர்கள், தலைமை வகிப்பார். அறிஞர் பலர், சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்பர்கள் அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

ஆதிதிராவிடர்கள் சங்கஸ்தாபனம்

26—12—28 தேதி அவனாசி தாலுக்கா சிக்காரம் பாளையம்புதூர் ஆதிதிராவிடர் சங்கம் ஒன்று திருவாளர் ஸ்ரீமான் சுப்பையகவுடர் அவர்கள் தலைமையின் கீழ் திறக்கப்பட்டது.

காரியதரிசி. ஊ. ரஞ்சப்பன்.

திருச்செங்கோடு சரஸ்வதி மாணவர் சங்கம்.

இச்சங்கத்தின் ஒன்பதாவது வாரக்கூட்டம் இம்மாதம் (மார்கழி) முதல் நாள் சனிவாரத்தன்று ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதாஸ்வாமிகள் தலைமையில் டெ சங்க நிலையத்தில் கூட்டப்பட்டது. ஏராளமான மாணவர்களும் பொது ஜனங்களும் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளும் திரு. ப. க. பழனிப்பரவர்களும் மாணவர்களை குப்புசாமி, ராமச்சந்திரன், வெங்கட்டரமணன் ரங்கராஜு, திரு. கந்தசாமி கவிராயர் முதலியவர்கள்கல்வி, சங்கம், தமிழ், சீர்திருத்தம், இளைஞர், கடமை, என்பனபற்றி உருக்கமாக பேசினார்கள்.

பார்ப்பனல்லாதார் மாகாண மகாநாடுகள். திருச்சிராப்பள்ளி.

தென்னிந்திய நலவுரிமைக் கூட்டுறவுச் சங்கத்தின் 11-வது மகாநாடும், தமிழ்மகாண சுயமரியாதை மகாநாடும், மகாண சுயமரியாதை இளைஞர் மகாநாடும் திருச்சியில் நடத்த வேண்டுமென தீர்மானிக்கப் பெற்றிருக்கிறபடியால் மேற்கண்ட மூன்று மகாநாடுகளுக்கும் வரவேற்புக்கழகத் தலைவர், மகாநாட்டுத் தலைவர், காலம் முதலியன நிர்ணயிப்பதன் பொருட்டு, நாளிது 16–12–28 ஞாயற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு திருச்சி பெரியகடைவீதி "சிவாஜி" நிலையத்தில வரவேற்புக் கழகத்தின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

D A. G. இரத்தினம், B. A., L. L, B.,

பூஜைமேடு

சுயமரியாதை திருமணம்.

14—12—28

பந்தல்லங்காரம்.

கடலூரிலிருந்து 8 மைல் தூரமும் ஆலம்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து 1½ மைல் தூரமும் உள்ள பூஜைமேடு என்னும் கிராமத்தில் சுயமரியாதை வீரர்களான திருவாளர்கள் சிங்கப்பூர் கோவிந்தசாமி நாயுடு, சாரங்கபாணி நாயுடு ஆகிய இருசகோதரர்களுக்கும் திருமணம்வெகு சிறப்பாகநடந்தேறியது. பூஜைமேடுஎன்னுமிராமம் சுமார் 20, 25வீடுகள் கொண்ட சிறுகிராமமாயிருந்தபோதிலும் திருமணத்திற்கு ஐம்பதிற்குமேற்கான மக்கள் கொள்ளும்படியாக பெரிய பெரிய கொட்டகைகள் 2, 3 தயார் செய்யப்பட்டிருந்தன. அதன் உயரங்கள் பார்ப்பவர்களுக்கு தலைப்பாகை சாயும்படியாக இருந்தன. ஒவ்வொரு கொட்டகையையும் பார்த்தவர்கள். இது ஒரு பெரிய மாகாண மகாநாடு நடத்துவதற்காகவோ அல்லது பெரிய நாடகங்கள் நடித்துவோ போடப்பட்ட கொட்டகையாவே யிருக்கவேண்டும் என ஐயுறாமல் இருக்க முடியாது. அக்கொட்டகையின் ஒவ்வொரு வாயிலிலும் பெரிய பெரிய வளைவுகள் "சுயமரியாதை பந்தல், திருமண மண்டபம், சுயமரியாதை தழைத்தோங்குக, வைக்கம் வீரர் வாழ்க" என்பன போன்ற வாக்கியங்களைக் கொண்டதாகவேஇருந்தன. இக்கொட்டகைகளுக்குள் சுயமரியாதைவாக்கியங்களும் நீதி வாக்கியங்களும் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான பெரிய பெரிய தட்டிகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. வாழை இலைக் குடைகளும் மாவிலைத்தோரணங்களும் காகிதத்தில் செய்தமாலைகளும் மற்றும் அலங்காரங்களும் பார்த்தோர்களை பிரமிக்கச் செய்யத்தக்கதாகவே இருந்தன.

திருமணத்திற்கு ஒரு மாதம் முன்னதாக இருந்தே பூஜை மேட்டின் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களில் "பூஜை மேட்டில் ஒரு நாஸ்திக கல்யாணம் நடக்கப்போகின்ற" தென்றும் "கிறிஸ்தவ வேத கல்யாணம் நடக்கப்போகின்ற" தென்றும் "பிரம்மசமாஜ் கல்யாணம் நடக்கப் போகின்ற" தென்றும் பெருங்கூச்சலும் கிளர்ச்சியுமாகவே இருந்ததால் இக்கலியாணத்தை பார்க்கவேண்டுமே என்கின்ற ஆசை ஒவ்வொரு ஆண், பெண், குழந்தை, வாலிபர், பெரியவர் முதலியவர்களுக்கும் ஏற்பட்டு கலியாணத் தேதியை எதிர்பார்த்த வண்ணமாகவே இருந்தார்கள். இவை எல்லாவற்றையும் விட வைக்கம் வீரர் உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் வருகின்றார் என்கின்ற பிரஸ்தாபமானது இப்பகுதிய வாலிபர்களை பூஜை மேட்டுத் திருமணத்திற்கு கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்து சேர்ப்பதுபோல் வாலிப உலகத்திற்கு ஒரு பெரிய எழுச்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தது. ஆதலால் இந்தகிளர்ச்சிகள் மேல்கண்ட பந்தல்களை மூன்றும் கொள்ளமுடியாத அளவுக்கு மக்களை பூஜை மேட்டிற்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டன. இவை மாத்திரமல்லாமல் அப்பக்கத்தியபிரபல நாகசுர வித்துவான்களும் பாட்டுக்காரதேவதாசிகளும் அழைக்காப்படாமலே தாமாகவே வந்து சேர்ந்து விட்டார்கள். கலியாணக்காரர்கள் அவர்களை "நாங்கள் உங்களை அழைக்கவில்லையே, நீங்கள் எங்கே வந்தீர்கள்" என்று கேட்டதற்கு "திரு. நாயக்கர் வரப்போகின்றார் என்றுகேள்விப்பட்டோம். அவரைப்பார்ப்பதற்கும் அவருக்கு எங்கள் மரியாதையையும் நன்றி அறிதலையும் செலுத்திவிட்டுப் போகவும் வந்தோம்" என்று சொல்லிவலிய வாசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

திரு. நாயக்கர் விஜயம்.

இக்கிலியீல் மலைமகன் திரு. கோவிந்தசாமி அவர்களும் அவரது நண்பரும் சுயமரியாதை வீரரும் தொண்டருமான திரு. பெருமாள் செட்டியார் அவர்களும் திரு நாயக்கரை அழைக்க ஈரோட்டிற்கும் திருவாளர் கண்ணப்பர், தண்டபாணி, ஆகியோர்களை அழைக்க சென்னைக்கும் கோவில் செவ்வாய் விட்டு வந்ததால் அவர்களும் வாக்குக்கொடுத்தபடியே 14-தேதி வெள்ளிக்கிழமை அதிகாலையில் 4-மணிக்கே பூஜைமேடு வந்து சேர்ந்து விட்டதால், அவர்கள் மேளவாத்தியங்களுடன்கொட்டகைக்கு அழைத்துச்சென்று வாவேற்பளித்து மாப்பிள்ளைகள் இருவர்களையும் கதருடையுடன் அழைத்து வந்து உட்காரவைத்து சற்று பேசிக் கொண்டிருந்தபோதும் நன்றாய் விடிந்துவிட்டது. இதற்குள் ஆண்களும் பெண்களுமாய் ஏராளமாய் வந்து கூடிவிட்டனர்.

மாப்பிள்ளையின் தயார் தகப்பனார் பெருங்கிய சுற்றத்தார் ஆகியவர்களுக்கு இந்தத் திருமண விஷயமாய் இதுவரை இனிது நிறைவேறும் வரையில் மனதிற்குள் இருந்த கவலையும் சங்கடமும் கணக்கிட்டுறைக்க முடியாத அளவு இருந்தது. எனெனில் இத்திருமண சடங்கு சம்மந்தமாய் அடிக்கடி பெண்வீட்டார்களை கலைப்பதும் அவர்கள் மயங்குவதும் உறவின்முறையார்கள் வரமாட்டார்கள் என்று பயப்படுவதும் மற்றும் ஏதாவது பழிப்பு ஏற்பட்டுவிடுமோ என்று நடுங்கி விடுவதும் ஆகிய பல காரணங்களால் கவலையுடனே இருந்தவர்கள் காலை 7 மணிக்கு அச்சிறு கிராமத்தில் கூட்டம் சமாளிக்க முடியாத அளவு வந்து கூடி இருந்ததைப் பார்த்தவுடன் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியை இதில் குறிப்பிட வார்த்தைகள் இல்லை. வாசகர்கள் தான் உணர்ச்சியால் உணர்ந்து கொள்ள வேண்டும். திருமணச்சடங்கு நடத்த சென்னையிலிருந்து வந்திருந்த ஒரு நாயுடு கனவானை பெரியாரை ஒவ்வொரு வரும் வந்து பார்த்து விட்டுப் போய்க் கொண்டே இருந்தார்கள். சரியாய் 7½ மணிக்கு மணப்பெண்கள் அலங்காரத்துடன் மண்டபத்துக்கு வந்ததும் பெருத்த ஆரவாரத்தினிடையே இரு ஜதைக்கும் திருமணங்கள் நடந்தேறியன. இக்கக்காட்சியானது ஆண் பெண் அடக்கலுக்கும் ஒரே மனதுடன் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

உடனே எல்லோருக்கும் காலை உண்டி எழுங்கப்பட்டதும் அக்கொட்டகையிலேயே திரு நாயக்கரால் ஒரு சொற் பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்து திருவாளர்கள் நாயக்கர், கண்ணப்பர், தண்டபாணி, ஆகியவர்கள் வாத்தியத்துடன் கொட்டகைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். சாதாரணமாக எந்த பொதுக்கூட்டகளிலும் அல்லது மகா நாடுகளிலும் இவ்வளவு கூட்டம் கூடி இருக்காதென்றே சொல்ல வேண்டும். நாயக்கர் கொட்டகைக்குள் பிரவேசித்தும் எல்லோரும் எழுந்து வணக்கம் செய்ய ஆசனத்தமர்ந்தி நாயக்கரை பேச வேண்டு மென்று திரு பெருமாள் அவர்களும் கோவிந்தசாமி அவர்களும் கேட்டுக் கொண்டதும்

திரு. நாயக்கர் பேசியதாவது.

சகோதரிகளே சகோதரர்களே! என்று தெலுங்கில் ஆரம்பித்து சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப்பிறகு தமிழிலேயே 2½மணி நேரம்பேசியதின் சுருக்கமாவது:—நாங்கள் இங்கு எந்தவித புதுச்சடங்கும் செய்யவோ அல்லதுமற்றவோ எண்ணங்கொண்டுவரவில்லை சுருங்கச்சொன்னால்அர்த்தமும் ஆவசியமும் இல்லாத சடங்குகளை எல்லாம் அடியோடு ஒழிக்கவும் சடங்குகள் செய்தவன் மூலமாகவுலகுக்குவெளியாகும்உயர்வுதாழ்வு உணர்ச்சியை ஒழிக்கவுமே வந்தோம். இன்று நடந்த திருமணம் எனது கொள்கைப்படி சரியான சுயமரியாதைத் திருமணம் என்பதாக நான்ஒப்புக் கொள்ள முடியாது. ஆனாலும் எனது நண்பர்களான திருவாளர்கள் பெருமாள், கோவிந்தசாமி இருவரும் எனது இயக்கத்திற்கு பெரிதும் ஆதரவளித்தார்கள்மலேயாசிங்கப்பூர்முதலியவெளிநாடுகளில் உங்களுள்ளசிலபார்ப்பனர்களும்பார்ப்பனக்கூலிகளும்இருந்துகொண்டே அங்குள்ளபாமரமக்களை ஏமாற்றி வயிறுவளர்க்கும் சில வயிற்றுப்பிழைப்பு ஆசாமிகளும் சுயமரியாதை இயக்கத்தை அத்தமிழ்மக்கள்தெரிந்துகொள்ளக்கூடாது என்றும் தெரிந்து கொண்டால் தங்கள்வாழ்வும் வயிற்றுப்பிழைப்பும் கெட்டுப்போகும் என்றும் பயங்கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்து எவ்வளவோ சூழ்ச்சிகளும் முயற்சிகளும் செய்துகொண்டிருந்த காலத்தில் அவைகளை எதிர்த்து வீரத்துடல்போர் புரிந்து சூழ்ச்சிக்காரர்களின் சுயரூபத்தை வெளியாக்கி மலேயா நாட்டுக்குத் தமிழ்மக்களுக்குள் சுயமரியாதை உணர்ச்சியே உண்டாக்கி அக்காட்டில் மாத்திரம் சற்றேறக்குறைய 2000 க்கு மேல்பட்ட 'குடி அரசு' பத்திரிகையும் சுமார் 250 'ரிவோல்ட்' பத்திரிக்கைகளும் நடமாடும்படிசெய்த சுயமரியாதைத்தொண்டர்களில் முக்கியமானவர்கள் ஆதலால் அவர்களுடைய கட்டளையை மறுக்க முடியாமல் இங்குவந்திருக்கின்றேன்.

அவர்கள் மனஉறுதியையும் பரிசுத்தத் தன்மையையும் நான் நன்றாய் உணர்வேன். இந்தத்திருமணத்தில்பார்ப்பன ஆதிக்கம்மாத்திரம் ஒழிக்கப்பட்டது என்று சொல்லலாமேலொழிய சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கையாகிய மூடநம்பிக்கை குரு

இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.



நமது மாபெருந்தலைவர் பனகால் அரசர்

சர். ராம ராய நிங்கவாரு M.A., M.L.C.: அவர்கள்

துஞ்சியதற்காற்றுது.

ஈரோடு அலிசவுக்கில் கூடிய மாபெருங்கூட்டத்தில் ஸ்ரீமான் L. S. சுப்ரமண்யஞ் செட்டியார் பாடிய

இரங்கற்பாக்கள்.

இழந்தனமே! இழந்தனமே! நப்பனகால் அரசரை நாம் இழந்து மண்மேல்
விழுந்தனமே! விழுந்தனமே! பிணமேபோல் உயிர்ப்பற்று விழுந்து முன்னோர்
பழந்தனமே! பழந்தனமே எனவிருந்த தலைவர்க்மைச் பார்ப்பார் முன்பு
இழந்தனமே இழந்த வரைப் பிரிந்தனமே என் செய்வோம எங்கும் நன்றோ! (1)

அந்தோளம் ஆருயிரே! அன்பே! நல் அறிவே! எம் அகத்தி னிக்கும்
செந்தேனே தெவிட்டாத தெள்ளமுதே! தேசத்தின் தேவே! கோவே!
கொந்தோமே துஞ்சியதைக் கேட்ட அன்னே நிலகுலைந்து நோயும் நூர்போல்
வெந்தோமே வெயில்பட்ட மெழுகேபோல் சொக்குருகி மெலிந்தே அம்மா! (2)

அம்மா! என் சொல்லிதுவோம் மேனாட்டின் சிக்கமதாய் ஆங்குச் சென்று
இம்மானி லத்திருக்கும் செல்வமெலாம் பலவகையால் அணுப விதது
செம்மாந்து கனியிருக்கும் வெள்ளையரைக் கண்டு கண்ணீர் சிதறத் தேம்பி
நம்மேனாட் டார்கலங்க ஆர்பரித்த கனம் பனகால் அரசே அப்பா! (3)

ஆர்பரித்து நஞ்செல்வம் குவிகின்ற மருந்தாலே ஆலறி வீழ
வேர்பரித்து வீட்டிடுவேன் இந்தியரை வைக்க இந்து விரும்பா விட்டால்
சீர்பருக்க இடங்கொடேன் என்று நம்மோர் மேலோங்கி நிற்கு மாறு
யார் பெருக்க நம்மவரைக் காப்பரினி கனம் பனகால்! எழிலார் கோவே! (4)

எழிலார்ந்த நம்நாட்டு மருந்துகளுக்குயிரளித்தே இருக்கச் செய்தாய்
பொழிலார்ந்த கோயில்களின் பொருளே எலாம் கவர்ந்துண்ணும் பொல்லாப் பார்ப்பார்
கழியார்ந்த மதத்தை எலாம் கெடுத்தருளி கவர்மெண்டைக் கலக்கச் செய்தாய்
மொழியார்ந்த படிநடக்க விடுத்தனையே கனம் பனகால்! மூதுமை யோனே! (5)

என்னே! இப் பார்ப்பனரால் கல்லாரி படிந்துயரம் எடுத்துக் கூறி
பொன்னே! என் மணியே! என் றனுதினமும் நின்னிடத்தில் போக்கு நிற்கும்
தன்னேரி லாதபெரு மானவருக் கெண்ணுரைத்துச் சாய்க்கா யபபா!
மன்னேறே! கனம் பனகால் அரசேயோ! வக்தமக்கோர் வார்த்தைக் கூறே (6)

பனகால் அரசர் நாள்.

சுயமரியாதை இயக்கத்தார், டிஸம்பர் 26-ஆம் நாளை, காலஞ்சென்ற நமது மாபெருந்தலைவர் பனகால் அரசரின் ஞாபகார்த்த நாளாகக் கொண்டாட வேண்டுகின்றோம்.



அனேகத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
வினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஞாறு வீபவ-வரு மார்கழி-ஸ்ரீ 9-உ.

மறைந்தார் நமதருமைத் தலைவர்! எனினும் மனமுடைந்து போகாதீர்

"தேடற்கரிய ஒப்பு உயர்வு அற்ற நமதருமைத் தலைவர் கனம் பனகால் ராஜா சர். ராமராய நிங்கவாரு திடீரென்று நம்மை விட்டு சனிக்கிழமை இரவு 1 மணிக்கு பிரிந்துவிட்டார் என்கின்ற சங்கதியைக் கேட்டவுடன் பொதுவாக இந்திய மக்களுக்கும் சிறப்பாக தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் ஏற்பட்ட அதிர்ச்சிக்கும் துக்கத்திற்கும் அளவே இருக்காது. ஒரு நல்ல நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைவரின் சாலம் முடிவு பெற்றதால் பெரியதும் நிறமையான துமானஒரு யுத்தம்முனைந்துவெற்றிகுறியோடுநடந்துகொண்டிருக்கும் சமயத்தில், போர் வீரர்கள் சேனாபதியின் ஆக்ஞையை எதிர்பார்த்துதிரும்பியபோது சேனாபதிஇறந்து போய்விட்டார் என்கின்ற சேதி கிடைக்குமானால், அந்தச் சமயத்தில் அப்போர் வீரர்களின் மனம் எப்படி துடிக்குமோ அதுபோல் நமது தமிழ் மக்கள் துடித்திருப்பார்கள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. திரு. ராஜா சாஹேப் அவர்கள் நம் தேசத்தில் உள்ள மற்ற பெரும்பான்மையான தலைவர்கள் என்பவர்களைப்போல் கவலையும் பொறுப்பும் இல்லாமல் கூட்டத்தில் கோவிந்தா போட்டுக்கொண்டு பாமர மக்களின் அறியாமையை ஆதாரமாய்கொண்டு வெறும் வார்த்தைகளை மாத்திரம் அடுக்காகவும் அழகாகவும் பேசுவதும் எழுதுவதும் சமயம் சந்தர்ப்பம் அவசியம் ஆகிய ஒன்றையும் கவனியாமல் சர்க்காரை எதிர்த்தும் கண்டித்தும் பேசுவதுபோல் காட்டுவதும் ஆகிய காரியங்களாலேயே பெரிய தலைவர் பட்டமும் கீர்த்தியும் பெருமையும் பெற்று வாழக்கூடியதான ஒரு சுலபமான முறையைக் கைக்கொண்டு தலைவரானார் என்று யாரும் சொல்லிவிட முடியாது. அன்றியும் மற்றொரு விதமாகவும் அதாவது பத்திரிகைக்காரர்கள் தயவால் அதாவது பத்திரிகைகாரர்களை திருப்தி செய்து அவர்களது லட்சியங்களுக்கு ஆதரவாய் இருந்து அவர்களால் கை தூக்கி விடப்பட்டுத் தலைவரானவரும் அன்று. அன்றியும் மற்றொரு விதமாகவும், அதாவது ஆங்காங்கு கூலி ஆட்கள் பிடித்து கூலி கொடுத்து அவர்களைக்கொண்டு நாடு முழுவதும் தங்களை தலைவர்கள் எனக்கூச்சலிடச் செய்து அதனாலேயே தலைவரானவரும் அன்று. அன்றியும் பார்ப்பனர்களின் அடிமையாய் இருந்து உலகலத்தின் போல் லோகலத்தின் போல் 'மோட்ச' லத்தின் போல் சுயராஜ்யத்தின் போல் என்று டார்ப்பன ஆதிக்கத்திற்கும் லத்திற்கும் ஆளாயிருந்து அவர்களால் தலைவர் பட்டம் பெற்றவரும் அன்று.

மற்றெனனையோவெனில் நாம்தப்பட்ட ஒடுக்கப்பட்ட இழிவாய்க் கருதப்பட்ட மக்கள் அதாவது தீண்டாதார் கீழ்சாதியார் என சர்தியார் சூத்திரர் என்பனவாகிய 'பிறவி இழிவும்' 'பிறவி அடிமைத்தனமும்' சுமத்தப்பட்டசுமார் 20 கோடி இந்திய மக்களின்சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் சமத்துவத்திற்குப்பனிதத்தன்மைக்குமாகவேண்டி பிரவாகமும் வேகமுமாகொண்ட வெள்ளத்தில் எதிர் நீச்சு செய்வதுபோன்ற கஷ்டமான காரியத்தைக் கைக்கொண்டு அதில் இறங்கி வேலை செய்தவர். அவ்வேலையில் அவர்பட்ட கஷ்டத்தை யார் அறிவார் என்பது எமக்கே சொல்ல முடியாததாய் இருக்கின்றது. இந்தியாவில் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற ஆசியில் இரக்கத்திற்கும் விரோதி ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற சமூகத்திற்கு விரோதி ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பத்திரிகைகளுக்கு விரோதி ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்ற பிரசாரக்கூலிகளுக்கு விரோதி இவ்வளவுமல்லாமல் மதிக்கத்தக்க பிரதிநிதித்துவம் என்று சொல்லும்படியான பாமர மக்களுக்கும் விரோதி என்று சொல்லும்படியானநிலையில் நெருப்பின்மேல் நின்றுகொண்டுவேலை செய்வதுபோல்வெகு கஷ்டமானதுறையில் வேலை செய்தவர். இந்த வேலையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன குணக்கள் வேண்டும் என்பதற்கு ஒரு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கினார் நமது தலைவர் பனகால் அரசர் என்று சொல்லுவது ஒரு சிறிதும் மிகையாகாது என்றே எண்ணுகின்றோம்.

அதுமாத்திரமல்ல, நமது தலைவரின் தொண்டில் அவருக்கு உற்ற துணையாகவாவது உதவியாகவாவது யாராவது இருந்தார்களா என்று பார்ப்போமானால், ஒருவரைக்கூட உறுதியாய்ச்சொல்ல முடியாது. இவருக்கு முன்னிய தலைவர்களான டாக்டர் நாயர், சர் தியாகராயர் ஆகியவர்களுக்கு நமது ராஜா போன்ற உள்ளன்போடு மனப்பூர்வமாய் பின் பற்றுகின்றவர்கள் அநேகர்கள் இருந்தார்கள், ஆனால் நமது ராஜாவுக்கு யார் இருந்தார்கள்? ஒருவரும் இல்லை என்று சொல்லுவதுடன் மாத்திரம் நில்லாமல் உள்ளுக்குள்ளாகவே எதிரிகள் சதா குற்றம் சொல்லிக்கொண்டும் பழி சுமத்திக்கொண்டும் அவரது தலைமையைகவிழ்க்க சூழ்ச்சிசெய்து கொண்டும் அவரைச் சுற்றிலும் அவரது சொக்காய்ப் டையிலும் இருந்தார்கள். பின்னை எப்படி ராஜாவுக்கு கட்சியும் ஆள் பலமும் இருந்தது என்று யாராவது கேட்பீர்களானால், அதற்கு பதில், அவருடையதனி சாமர்த்தியத்தால், புத்திசாலித்தனத்தால்இராஜ, தந்திரத்தால், சிலரை தான் சொல்லுகின்றபடி. கேட்டுத்தீரவேண்டிய நிலையில் வைத்துக்கொண்டிருந்ததில் என்று தான் கொல்லவேண்டும். அன்றியும் பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்னும் கூட்டத்தாரில் பனகால் அரசரால் அதிருப்தி அடையாதவர்களோ ஏமாற்றமடையாதவர்களோ அவர் மீது வெறுப்புக்கொள்ளாதவர்களோ ஒருவர் இருவராவது உண்டு என்று சுலபத்தில் சொல்லிவிட முடியாது எனெனில் அவர் ஒரு அருமையான சாதனத்துக்கு பாடுபட்டதினால் அது எதாவது கடுகளாவாவது டயன் அனிப்பானாலும் அந்தப்பலன் அனுபவிப்பதில் எற்படும் சண்டைகளும் போட்டிகளும் அபிப்பிராயபேதங்களும் சாஜாசாஹேஜமாகவே அனேகருக்குவிரோதியாகவும் அதிருப்திகொள்ளவேண்டியவராகவும் செய்து விடுகிறது. இந்த நிலையில் அவர் மேல்கண்டதொண்டில் ஒரு தனி வீரராய் நின்று போர் புரிக்தார் என்றுதான் சொல்லியாக வேண்டும்.

அப்படியிருந்தாலும் எதிரிகளால் அடிக்கடி அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளோ சமாளிப்பதில் வழிதவறிப்போயாவது மனிதத்தன்மைக்கு விரோதமாகவாவது ஒரு சிறு காரியத்தையும் செய்யாமல் ஒருகத்த வீரனைப்போலவே நின்று கருமம் ஆற்றியவர். எந்தசமயத்திலும் மனம் கலங்கியோ அல்லது உருக்காவது பணிந்தோ அல்லது தலை குனிந்தோ நின்றவரல்ல.

எக்காலத்திலும் வீரரே.

உதாரணமாக, அவரது தலைமைவாழ்வு இந்த 10 வருஷத்திற்கு உள்ளாக மூன்று பரீக்ஷைக்கும் ஆளாயிற்று. அதாவது ஒருசமயத்தில், முதல்மூன்று வருஷத்தில் அவருக்கு அதிகாரமும் செல்வாக்கும், அதாவது மந்திரி அதிகாரமும் சபை செல்வாக்குப், இருந்தது இரண்டாவது மூன்றுவருஷத்தில் உள்ளுக்குள்ளாகவே கக்ஷி ஏற்பட்டதால் செல்வாக்கு இல்லாத அதிகாரம், அதாவது சபை செல்வாக்கில்லாத மந்திரி அதிகாரம் மாத்திரம் இருந்தது. மற்றொரு சமயத்தில் மூன்றுவது மூன்று வருஷத்தில், உள்ளகலத்தை எதிரிகள் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொண்டதால் அதிகாரமும் செல்வாக்கும் இரண்டும், அதாவது கக்ஷிசெல்வாக்கும் மந்திரி

அதிகாரமும் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது. ஆனாலும் முக்காலத்திலும் அவர்செய்யவேண்டியதை தைரியமாகவும் ஒழுங்காகவும் செய்துவந்தார் என்றுசொல்லியாகவேண்டுமேயொழியஎப்போதாவது கனைத்துப்போயோ மனமுடைந்துபோயோ விட்டார்என்று சொல்லமுடியாது மேலும், அதிகாரமும் செல்வாக்கும் இல்லை என்றுசொல்லும்படியான மூன்றாவது மூன்றுவருஷமான நிகழ்காலத்தில் மந்திரிவேலையுமில்லாமல் கஜானாசெல்வாக்கு மில்லாமல் மூன் ஆறு வருஷத்தில் செய்யமுடியாத காரியங்கள் ஆனேகம்செய்துமுடித்திருப்பதையாரும்மறுக்கமுடியாது. அதனாலேயே நமதுபனகாலரசரின் பெருமையும் சாமர்த்தியமும்விளங்கும்படியான சம்பவங்கள்கடந்துகொண்டேவந்தன

திரு பனகாலரசருக்கு மந்திரி அதிகாரமும் கஜானா செல்வாக்கும் இருந்தகாலத்தில் நம்நாட்டில் பார்ப்பன ஆயுதமான காங்கிரசுக்குஇருந்த செல்வாக்கும் மதிப்பும் இப்போது பூதக்கண்ணாடிவைத்து தேடினாலும் கிடைக்கமுடியாத மாதிரி வக்கீல் குமஸ்தாக்களின்தோட்டங்களிலும் வக்கீலுக்குக்கஜானாக்காரர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிடும் தரகர்களின் புழக்கடைகளிலும் புகுந்து மறைந்துகொண்டது.

இந்த இரண்டுவருஷ காலத்தில் நமது தமிழ்நாட்டில் காங்கிரசு, ஒருமாகாண மகாநாடு கூடகூட்ட முடியாத அளவுமுறியடிக்கப்பட்டதற்கு முக்கியகாரணம் நமது தலைவருக்கு "அதிகாரமும் செல்வாக்கும்" என்பவைகள் "போய்விட்டதில்" பலன்தான்என்று உறுதியாய்ச் சொல்லுவோம். இவ்வளவிலும் பொருக்கியெடுத்த மணிபோன்ற அதிசயம் என்னவென்றால், அவர் எந்தக்காலத்திலும் சர்க்காரிடத்திலோ மற்றும் யாரிடத்திலோ தனதுகொள்கையை சிறிதாவதுவிட்டுக்கொடுக்கசம்மதிக்காததும் யாருக்கும் தலைவணங்காததுமேயாகும்.

முக்காலத்திலும்சர்க்காரைநடத்தக்கூடிய ஒற்வறத்தலைவராகவே (டிக்டேட்டராகவே) இருந்தார்அதிகாரமும்செல்வாக்கும் இல்லாதகாலத்தில்தான் நமது தலைவரானவர் பெருமைதங்கிய கவர்னர் பிரபுவான லார்ட்கோஷன் அவர்களை—சென்னை அரசாங்கத் தலைவரை—அரசரின்பிரதிகாவலரை—மூட்டைமூடிச்சுகளுடன் கப்பலேறும்படி உத்திரவிட்டார். "பெரிய தலைவர்கள்", "33 கோடி மக்களின் பிரதிநிதிகளான" காங்கிரஸ் காரர்களும்அவர்கள் முன்னோர்களும்முன்புஇதைவிட அதிகமாகச்சொன்னபோதெல்லாம்சிறிதும் லக்ஷியம்செய்யாதஅரசாங்கம்—அரசாங்கத்தலைவர்கள் நமது அரசர் பனக்கால் வீரர் "உம்மீது நம்பிக்கையில்லை, கட்டு மூட்டை" என்றுசொன்னவுடன்லாட்டுகோஷன் மாத்திரமல்ல, செயின்ட் அரசாங்கம் மாத்திரமல்ல. இந்திய அரசாங்கம் மாத்திரமல்ல பார்லிமெண்டுகூட நடுங்கின நடுக்கம் யாரே அறிவார் சர்கஸ்காரன் முதிரைகளையும் யானைகளையும் சிங்கங்களையும் ஓட்டுவதுபோல் இந்த அதிகாரமும் செல்வாக்கும் இல்லாதகாலத்தில் அவர் அரசாங்கத்தைஓட்டினவித்தையோட்டம் அறிஞர்களுக்குமட்டுமல்லாமல் அறியாதவர்கள் என்பவர்களையும் அதேமந்திரமாகச்சொல்லிக்கொண்டிருக்கும்படிசெய்துவிட்டது. இதுஒன்றேஅவர் அரசாங்கத்திற்கு அடிமைபார்ப்பு இருந்தாரா அரசாங்கத்தை ஆட்டிவைத்தாரா என்பதைகளைக்கிவைக்கும்

அவர் சென்னை அரசாங்கத்தை மாத்திரமல்லாமல் அகில்யமான போது இந்திய அரசாங்கத்தையும் பார்லிமெண்டையும்கூட மிரட்டி நடுங்கவைத்து வந்திருக்கிறார். மற்றும்அவர் அதிகார ஓட்சியான ஆறுவருஷ மந்திரிகாலத்தில் தனது மந்திரிவேலையை ராஜினாமா கொடுத்தது குறைத்தது மூன்று நான்குதரம் இருக்கும் என்றே சொல்லலாம் 1921-ல் தொழிலாளருக்காக ஒருதடவையும் 1924-ல் வெளியில் சொல்லக்கூடாத விஷயத்திற்காக ஒருதடவையும் 1926-ல் தேவஸ்தான ஆக்ட்டுக்காகவும் சர் சி. பி. அவர்கள் அக்கிரமத்திற்காகவும் ஒருதடவையும் மற்றுஞ்சில சமயத்திலும் அவர் இராஜினமா கொடுக்கத் துணிந்ததும் ராஜினமா கடிதம்எழுதி கவர்னர் பிரபுவுக்கு அனுப்பிவிட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டதும்கவர்மெண்ட்மெம்பர்களும்மீனரிஸ்டர்களும் ராஜினமாவைவாபீசுபெற்றுக்கொள்ளச் செய்ததும் அவரது உத்தியோகஆலஷியத்தைகாட்டப் போதுமானது.

மற்றும் அரசியல் சுதந்திரம் என்பதின் போல் தேசத்திற்காக பனகால் வீர் போட்டதிட்டங்கள் இப்போதுஉள்ளஎந்தப் பெரியமகாத்மாக்களோ சிங்கங்களோ லோகமான்யர்களோ தேச பந்துக்களோ நேருக்களோ தேசிய வீரர்களோ அம்மைகளோ மகான்களோ ஆகியவர்கள் கேட்டவைகளுக்கு ஒருபடியாவது அதிகமானதாயிருக்கு மேழுதிய ஒரு நெல்லிடை அளவாவது குறைத்ததாயிருக்காது என்பதுகல்லின் மேலும் எழுதுவோம். வெள்ளைக்காரர்களிடமிருந்து அதிகாரங்களைப் பறிப்பதில் நமது ராஜா அவர்கள் காங்கிரசுக்காரர்களைவிடசிறிதும்பின் வாங்கியவரல்ல என்றே சொல்லுவோம். அநேக இடங்களில் இதுவரை வெள்ளைக்காரர்கள் பார்த்துவந்தஉத்தியோகங்களைகையைத்தூக்கிபிடிக்கிக் கொள்வதுபோல்வாதாடி பிடுங்கிக்கொண்டார். அப்போர்ப்பட்ட நிலையில் பார்ப்பனர் பார்ப்பனல்லாதார்என்கின்ற விஷ்பாசத்தை ஞாபகத்திற்கு கொண்டுவந்தவரே அல்ல. ஆதால் நமது பார்ப்பனக் காங்கிரசுக்காரர்கள் நேரே, தங்கள்கைக்கு எதாவது உத்தியோகங்கள் வாது என்று தீர்ந்தால் உடனே அற்றை வெள்ளைக்காரர்களைதான் பாராட்டவேண்டும் என்று சொல்லிவந்திருக்கின்றார்கள்

இதற்கு ஆதாரம், எவ்விதமான சீர்திருத்தம் வேண்டுமென்று பார்லிமெண்டாரால் சென்னை அரசாங்க மெம்பர்கள் என்கின்ற முறையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நமது பனகால் அரசர்கொடுத்த பிடையும் வெகுளாபகாங்கிரஸ்காரர் சர். சி. பி. ராமசாமி அய்யாவர்கள் கொடுத்த பிடையும் போதுமானது. அவ்விடைகளை பார்த்தவர்களுக்கு எந்தஇயக்கம் எந்தக்கூட்டம் தேசத்துரோகி எனபதும் யார் தேசபக்தர்கள்என்பதும் ஒரு மூடனுக்கும் விளக்கச்செய்யும்.

அவரது கல்லை வார்த்தானில் அவர் எத்தக்காரியம் செய்தாலும் சமூகத்திற்கும் காட்டிற்கும் ஒரேவித கண்மையைக்கருதி திட்டம் போடுவாரே ஒழிய ஒன்றுக்கொன்று விரோதமாகவோ தனது சயநலத்திற்காகவோ ஒரு சிறு காரியத்தையும் செய்ததாக அவர் இறந்த பிறகு கூட இதுவரை அவரைத்தூற்ற முற்பட்டவருங்கூட ஒரு சந்தர்ப்பத்திலாவது சொல்லவரவில்லை என்பதாலேயே விளங்கும். பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிக்கைகளும் பார்ப்பனக்கூலிகளும் அவர்களது பத்திரிக்கைகளும் நமது ராஜாவின்மீது சுமத்தியபழிகளும் செய்த சூழ்ச்சிகளும் விஷமப்பிரசாரங்களும் கொஞ்சநஞ்சமல்ல வானாலும் ஒன்றையாவது லக்ஷியம்செய்து பதில்சொல்லவோ அல்லது அந்தபார்ப்பனர்களை லக்ஷியம்செய்து திருப்பிச்சொல்லவோ சற்றாவது தனது காலத்தைச் செலவழித்தார் என்று அவரது எதிரிகள்கூட இதுவரை சொல்லவரவில்லை.

இந்த தலைமைஸ்தானத்தால் மற்றவர்களைப்போல் பணம் சம்பாதிக்காமல் இருந்ததோடு மாத்திரம்அல்லாமல் குறைந்தது மாதம் 1க்கு2000 ரூவாவரை இயக்கத்திற்காக செலவுசெய்துகொண்டு முழுநேரத்தையும் அதற்கே ஒப்புவித்து விட்டவர்,கடைசியாக உயிரையும் கொடுத்துவிட்டார். இதனால் உண்மைத்தியாகி, ஒப்பற்ற தலைவர் மறைந்தார்.

இந்நிலையில்இப்போர்ப்பட்டதலைவரை இழந்து பரிதவிக்கும் தமிழ்மக்களுக்கு நாம்என்ன ஆறுதல் சொல்லமுடியும்என்பது நமக்கே விளங்காமல் துடிக்கின்றோம்.

சமாதானம்.

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் தடை செய்யமுடியாததத்துவம். தலைவர்கள் போவதும்வருவதும் முரண்பாடில்லாத வழக்கம். இதற்குமுன் எத்தனையோ தலைவர்கள் மறைந்து போனார்கள். எத்தனையோ தலைவர் தோன்றினார்கள். நமது தலைவரும் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் பிறந்த அன்றே அதே நேரத்தில் பிறந்து சாகும்வரை நமக்காகவே உழைத்து 62 வயதான பிறகே உயிர்நீத்தார். இந்திய மக்களின் சராசரி வயது 24 என்றால், சராசரிக்குமேல் 39 வருஷம் வாழ்ந்திருந்து நமக்குசெய்திருக்கும் நன்மைகளை உணர்ந்து திருப்தி அடையாமல் இன்னும் கவலைப்பட்டுக்கொண்டுமனதுடைந்து போவதானது நமது மயக்கத்தையும் பராசையையுமே காட்டும். எந்தத் தலைவர் அல்லது எந்தப் பெரியார் சாகாமல் "சிரஞ்சீவியாய்" வாழ்வதை நாம் பார்க்கிறோம். இப்படி இருக்க உலகில்மக்களில் ஒருவர் இறந்ததற்காக ஒருவர் ஏன் துக்கப்படுகின்றார்கள் என்று கேட்போமானால், அது இறந்தவரின் அருமை பெருமையைப்பற்றிபேசவும் அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மைதீமைகளை உணர்ந்து அதன்படி நடக்கவும் அவர்களது உயர்ந்த குணத்தை பின்பற்றவும் சித்தாந்தப்படுத்திக்கொள்ள இந்த சமயத்தை உபயோகித்துக்கொள்வற்காகத்தான் என்பதே எமது அபிப்பிராயம். அன்றியும் காயுர்பெருமான் அவர்களும் இதேமாதிரி நெருக்கடியான சமயத்தில் தேசம் விட்டு தேசம் போய் உயிர் துறந்தார். நிபாகாய வள்ள

லும் இதே போல் இறந்தார். பனக்கால் வீர ரும் அவர்களைப் பின் பற்றி நடந்தார். ஆனல் நாயர் பெருமான் காலமானவுடன் மக்கள் கண்ணிலும் மனதிலும் நியாகாய வள்ளல் தோன்றினர். அதுபோலவே நியாகாய வள்ளல் மறைந்தவுடன் நமது பனகால் வீரர் தோன்றினர். பனக்கல் வீரர் மறை நதபிறகு யாரும் தோன்றக்காணோம். அவர் மறைந்த பிறகு சற்றேறக்குறைய இரவும் பகலுமாக 192 மணி நேரம் லக்ஷக்கணக் கானவர்கள் காலம் சென்ற தலைவரைப் போல் ஒரு தலைவரை தேடித்தேடி கண்டுபிடித்தாய் விட்டது; இன்னமும் ஒரு வரும் புலப்படவில்லை. இது ஒன்றே நம தது பனக்கால் வீரர், ஒப்பாரும் மிக்கா ருமற்ற தலைவர் என்பதை காட்டுகின்றது.

ஆனலும் இதற்காக மனமுடைந்து போகாமல் இந்த நிவர்த்தி இல்லாததும் பெரிய துக்ககரமானதுமான சந்தர்ப்பத்தை யும் "இதுவும் ஒரு நன்மைக்காக" என் பது போல் கருதி அதை அந்தப்படி உப யோகித்துக் கொள்வது தான் அறிவுடை மையாகும். அன்றியும் அதுதான் அறி வும் வீரமும் நியாகமும் உறுதியும் கொண் ட தலைவரால் நடத்தப்பட்ட மக்கள் என்ப வர்களுக்கு ஏற்ற குணமுமாகும்.

"இனிமேல் நமக்கு எதற்காக தலைவர்கள் வேண்டும்? இனியும் நாம் எத்தனை நாளைக்கு தலைவர்களாலேயே நடத்தப்ப ட்டுக்கொண்டிருக்க வேண்டும்? இவ்வளவு அருமை பெருமை சாமர்த்தியம் வீரம் வாய்ந்த தலைவர்களால் இத்தனை கா லம் நடத்தப்பட்டும் இனியும் நாம்நமது கா லிலேயே நிற்கமுடியாத பலஹீனர்களாகநா ம் இருப்போமானல் அல்லது இருக்கின்றோ ம் என்று நினைத்துக் கொண்டிருப்போமா னல் என்று தான் நாம் மனிதர்களாவது?', என்பது போன்ற ஞானங்கள் உதயமாவ தற்கு இதுவே தக்க சமயம் என்று கூச ாமல் சொல்லுவோம். ஏனெனில் இந்த சம யத்தில் நாம் நிலை கொள்ளவில்லையானல் இனி நமக்கு வெகு காலத்திற்கு விமோச னம் இல்லை என்று தான் முடிவு கட்டிக் கொள்ள வேண்டும்.

தலைவர் அவசியமா?

தந்தையை இழந்த மக்கள் தங்களது வாழ்க்கையை இனி தந்தை இல்லாமல் எந்த விதமாய் நடத்துவது என்கின்ற யோசனை கொண்டு மார்க்கம் கண்டு நட க்க முயற்சிப்பார்களே ஒழிய வேறு தந் தையா என்று நினைத்துக் கொண்டு தேடி த்திரியமாட்டார்கள். அதுபோலவே நாமும் இனித்தலைவரைத்தேடிக்கொண்டுதிரிவதை ப்போன்ற பைத்தியக்காரத் தனம்வேறில்லை என்றுநினைக்க வேண்டும் உண்மையில் நமக் குஇப்போதுஎன்னகுறைதலைவர் இல்லாதகு றையாநமக்குப்போதியகவலையும்உணர்ச்சியு ம்பொறுப்பும்இல்லாதகுறையா? என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்க்கவேண் டும். உண்மையைப் பேச வேண்டுமானல், நமது மக்களுக்கு இனியும் போதிய உணர் ச்சி ஏற்பட வில்லை பொறுப்புஏற்றுக்கொள் ள வில்லை சுயநலம் அளவுக்கு மேல் தாண்ட வமாடவிட்டு விடுகின்றோம் இந்தியாதி ரு ணங்கள் உள்ள சமூகம் ஆயிரம்ஆயிர நாயர்களையும் நியாகாயர்களையும் பனகால் வீரர்களையும் "சிறஞ்சீவி"களாக வைத்துக் கொண்டிருந்தாலும் முற்போக்கடைய முடி யவே முடியாது என்று சொல்லுவ தற்காக மன்னிக்க வேண்டுகிறோம் நமது ஞானிலக்கு நமது மக்களில் பாமர மக்களை விட படித்தவர்கள் என்பவர்களும் பணக்காரர்கள் என்பவர்களுமே மிகுதியும் காரணஸ்தர்களாய் இருந்துவந்திருக்கின்றார் கள் என்று சொல்லுவதற்கு படித்தவர்கள் என்பவர்கள் நம்மை மன்னிக்கவேண்டும்.

நமது மேல்கண்ட தலைவர்களால் இது வரையில் பாமரமக்களை விட முக்கியமாய் படித்தவர்கள் எனபவர்களும் சிறிது பணக் காரர்கள் என்பவர்களுமே பயன் பெற்று வந்திருக்கின்றார்கள். அதற்கு உதாரணமாக அனேக படித்தவர்கள் பெற்றிருக்கும் உத்தியோகங்களையும் பணக்காரர்கள் பெற் றிருகும் பதவிகளையும் கவனித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. ஆனல் இப்படித்தவர்களினுடையவும்பணக்காரர்க ளினுடையவும்உணர்ச்சிஎப்படி இருக்கின்ற துஎன்று பார்ப்போமானல் வெளியில்சொல் ல வெட்கப்பட வேண்டியவர்களாகவேயிரு க்கின்றோம்.

நமது போக்கியதை.

உதாரணம் வேண்டுமானலும் சொல்லு கின்றோம் ஆனல் கோபிப்பதில் பயன் இல்லை ஒரு சாரணமான 2½ அடி உயரமுள்ள பையன் அதுவும் அரை டிக்கட்டுக்கு அரு கதை யில்லாதன் என்று சொல்லக்கூடிய வல் முதற் கொண்டு பெரிய ஆசாமி என் கின்றவர்கள் வரையில் இரண்டு கோணை எழுத்து அறிவோ அல்லது ஏதாவது ஒரு சர்வகலாசாலைப்பட்டமோ பெற்றவிட்டால உடனே தன்னை ஒரு பெரிய முக்கிய மான பார்ப்பனரல்லாதார் என்று நினைத்துக்கொள்வதும் "பார்ப்பனரல்லாத ரியக்கம் என்ன செய்து விட்டது, யாரு க்கு சாதித்து விட்டது, எனக்கு இன்னமும் யாதொரு உத்தியோகமும் கொடுக்கவில்லை, அவனுக்குக் கொடுத்தார்கள், இவனுக்குக் கொடுத்தார்கள், எல்லாம் அயோக்கியர்கள் சுய நலத்திற்காக மோடும் வேஷமே ஒழிய இது பார்ப்பனரல்லாதார் இயக்கமல்ல" என சவ டால் அடிப்பதும், "பனக்காரத்தெரியாத காயைத் தெரியாதா, செட்டியாரைத்தெரி யாதா, எல்லாம் கூட்டுக்கொள்ளை' என்று சொல்லுவதும் "பார்க்கப்போனல் பார்ப்ப னர்களே நல்லவர்கள்" என்று சொல்லுவ தும் "என்ன இருந்தாலும் காங்கிரசைக் குற்றம் சொல்லலாமா? ஆகலால் தான இய க்கோடு இருக்கமுடியவில்லை" என்பதும்ல லாம்சரி எனக்கு யுத்தப்பெயர்தான் பிடிக்கவி ல்லை என்பதான துயரத்தைக்காட்டுவதும் அசம்பாவிதமானவார்த்தைகளை உளறி க்கொண்டு திரிவதும், இவ்வள வையும் சிந்தித்துக்கொண்டும தலைவர்கள் எதாவது உத்தியோகமோ, பதவியோ கொடுத்தா லும் அதைப்பெற்றுக்கொண்டவுடன் சீர் திருத்தவாதிகளாகவும் அலட்சிய புத்தியுடைய வர்களாகவும் இருந்துகொண்டு, 'பனக்கால் இப்படி நடக்கவேண்டும், அப்படி நடக்க வேண்டும்' என்று அவருக்கே புத்தி சொல் லுவதும், பார்ப்பனர்களுக்கு உள் ஆளாயிரு ப்பதும், இயக்கத்தைக்குறை கூறுவதுமான வேலையிலேயே காலங்கழிப்பதுமாய் இருக் கின்றார்கள். பனக்காரர்களும் தங்களுக்கு பதவி கேடபதும், கிடைத்துவிட்டால்இய்க் கத்தை மறந்து விடுவதும், கிடைக்காவிட் டால் இயக்கத்தையும் தலைவர்களையும் குற் றம் சொல்லிக்கொண்டு எப்படியாவது இந் த இயக்கத்தை ஒழித்தாலொழியநாட்டுக்கு மோட்சமில்லைஎன்று பிதற்றித் திரிவதுமான வேலையில் ஈடுபடுவதைத் தவிர வேறு ஒரு நன்மையுமே செய்யாமல் இருந்து வருகின் றார்கள்.

இதற்கு வெளிப்படையான சாட்சி பார்ப்பனரல்லாதார் பெயர் சொல்லிக்கொண்டு பெரிய பெரிய உத்தி யோகம்பெற்றவர்கள், ஜில்லாஜட்ஜி, கலெக் டர் முதல் சாதாரண பெரிய உத்தியோகம் வரை பெற்றவர்கள் இயக்க பத்திரிகை வா ங்கமாட்டார்கள். வாங்கச் சொன்னல் அதில் குற்றம் சொல்லுவார்கள். மீறிவாங் கினலும் பணம் கொடுக்கமாட்டார்கள். கே ட்கப் போனல் "அத்தப்பணம் என்ன ஆச் சுது, இத்தப்பணம் என்னஆச்சுது" என்று கேட்பதின் மூலம் பழி சுமத்தவருவார்கள். அதோடு எதிரிகளின் பத்திரிகை களை முன் பணம் கொடுத்து வாங்கிப் படிப்பார்கள். அன்றியும்இவர்கள் தங்களை பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்கள்என் றும் அவ்வியக்கத்திற்குள்ளாகவேஎதிர்க்கட் சித்தலைவர்கள்என்றும்சொல்லிக்கொள்ளுவா ர்கள்.

சாதாரணமாக, அவ்வியக்கம் அதிகாரத் திலும் செல்வாக்கிலும் இருந்ததான 1927ம் வருஷம் வரையில் "ஜஸ்டிஸ்" பத்திரிகை 1200ம் "திராவிடன்" பத்திரிகை700 ம்தான் அச்சாகிக் கொண்டு வந்தன. இதற் கும் மந்திரிகள் மாதம் 2000 ரூபாய் போல் கொடுத்து வந்தார்கள். மற்றபடி சில ஜமீ ன்தார்களும் பெரிய பணக்காரர்களும் உத வினவந்தார்கள். ஆனல் இயக்கத்தால் உத்தி யோகம்பெற்றவர்களில்பணங்கொடுப்பதை யோ பத்திரிகை படிப்பதையோ தங்கள் கடமை என்று நினைத்தவர்கள் யார் என்று சொல்ல முடியாமலே இருந்தது. இன்றை யத்தினம் 3000க்குமேல்பட்ட "ஜஸ்டிஸ்"ம் 6000க்கு மேல்பட்ட "திராவிட"னும் வெ ளியாகின்றதானலும் "ஜஸ்டிஸ்"க்கு மாதம் 1க்கு 1500 ரூபாய் நஷ்டமும் "திராவிட" னுக்கு மாதம 1க்கு 500 ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டு வருவதன் மூலம் "ஜஸ்டிஸ்" "திரா விடன்" பத்திரிகைகள் 25000 ரூபாய் கடனிலும் அது இன்னமும் பெருகும்படி யான நிலையிலும இருக்கின்றது. நியாகாய கமோரியல்கட்டிடத்திற்கும்40000ரூபாய் கடனும் வட்டி ஏறிகொண்டும் வருகின் றது.

எனவே பார்ப்பனரல்லாதார் இயக்கத் தால் கண்மை அடைந்தவர்களின் யோக்கிய தைக்கும், ஒப்பற்ற ஆருமையான 3 தலைவர் களால் அவ்வளவு நியாகபுத்தியுடனும் சம ர்த்துடனும் நடத்தப்பட்ட மக்களின் நன்றி யறிதலற்ற தன்மைக்கும் வேறு என்ன

உதாரணப்வேண்டும்என்று கேட்கின்றோம்.

மற்றும் இவ்விலாக்கானது, தன்னிடமிருந்து வெறும் உத்தியோகத்தையும் பதவியையும் மோத்திரம் எதிர்பார்க்கும் மக்களைக் கொண்டிருக்கின்றவரையிலும்-இயக்கத்தின்லட்சியமே வெறும் உத்தியோகங்களை சர்க்காரிடமிருந்தும் பார்ப்பனர்களிடமிருந்தும் பிடுங்கிக்கொள்வதுதான் என்று கருதும் மக்களை கொண்டிருக்கும் வரையிலும்-இனியும் எத்தனை தலைவர் தோன்றினாலும் உண்மை லட்சியம் கைகூடும் என்றுநம்மால் சொல்லமுடியாது. பகுதிப் போட்டியாலும் அதிகாரப் போட்டியாலும் உத்தியோகப் போட்டியாலும் மக்களுக்குள் கட்சிப்பிரிவு கட்சியும் விரோதமும் வெறுப்பும் ஏற்படும் நிலைமை மாறும்படி செய்யவேண்டும். உத்தியோகம், பதவி, அதிகாரம் முதலியவைகள் எல்லாம் சமூக முன்னேற்றத்திற்காக பயன்படுத்தக்க வழியில் கைப்பற்றவும் உபயோகப்படுத்தவுமான மாதிரியில் நிர்வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். பெரிய சம்பளமுள்ள மந்திரி போன்ற பொதுப்புள்ள அதிகாரப் பதவிகள் இயக்கத்தின் பிரதிநிதித்துவமாக அனுபவிக்கவேண்டும். அதன் வருமானம் முழுவதும் இயக்கத்திற்குச் சேரவேண்டும். வேலை பார்ப்பவரின் செலவுக்காக இயக்கத்திலிருந்து ஏதாவது கொடுபடவேண்டும். கவர்ன்மெண்ட உத்தியோகங்களும், பொதுநன்மையை கருதுபவர்களுக்கே-ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்படி கட்சியவர்களுக்கே-கொடுக்கப்படவேண்டும்.

அன்றியும் சாதாரணமாக இதுசமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் உண்மையிலேயே கொள்கைகளுக்காக அபிப்பிராய பேதம் இருப்பதாகயாரும்சொல்லமுடியாது. சுயநலத்தைமுன்னிட்டுஏற்பட்ட விரோதத்தினால்இதுவும் எதிர்த்து நிற்கவும் வேண்டி வேண்டுமென்றே சில மாறுபட்ட அபிப்பிராயங்களைக்கற்பித்துக்கொள்ளவேண்டியிருக்கிறதே ஒழிய வேறில்லை.

இந்த நிலைமை அடியோடு ஒழியவேண்டும். இன்னும் இன்னொன்ன பல விஷயங்களை கவனித்து மக்கள் தங்களைத் திருத்திக்கொள்ள சம்மதிப்பார்களானால் தலைவர் மறைந்த நஷ்டம் கம்மியென்றும்செய்துவிடாது.மற்றும் அவர்களின் உயிர்த்தத்தினால் நாட்டுக்கு நன்மை ஏற்பட்டது என்றுகூட சொல்லத்தக்க ஒரு பெருமையும் மறைந்த தலைவர்களுக்குஏற்படும்.இந்தசமயத்தில்முடிவாகவும் சுருக்கமாகவும் நாம் இவற்றைச் சொல்லி இந்த நமது தயாதனையும் ஏசையையும்படித்த மக்களிடம் சாதாரணபொது மக்களிடமேதெரிவித்துக்கொண்டும் விவகாரியேயும்கை கொண்டும் இருக்கின்றோம். ஆதலால் இந்த சகித்தற்கரிய துக்கத்தால் யாரும் தங்கள் பிற்கால நிலையைப்பற்றி உலைந்து போகாமல் நம்பிக்கையோடுஒற்றுமைப்பட்டு கட்டுப்பாடாக முன்னேற்ற வேலை செய்ய வேண்டும் என்னும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மக்கள் எல்லோரும் நாயராக!
எல்லோரும் ஐயாகளாயாக!!
எல்லோரும பனக்கால் வீராக!!!

முக்கிய குறிப்பு.

நமது பத்திரிகை.

'குடி அரசு''ப்பத்திரிகையானது அபிமானிகளின் பெருக்கத்தால் வாராவாரம் நிட்டதட்ட 10000 பதினாயிரம் பிரதிகள் வரை பதிப்பிக்க வேண்டியிருப்பதாலும், சமீப காலத்திற்குள் பதினாயிரம் பிரதிகளுக்கு மேல் அச்சுப் போட வேண்டியிருக்குமாதலாலும், தற்போது நம்மிடம் இருக்கும் அச்சு இயந்திரம் அவ்வளவு பிரதிகள் அச்சியற்றபோதுமானதாய் இல்லாததாலும், இதற்காக வாங்கப்பட்ட மற்றொரு பெரிய அச்சியந்திரம் "திராவிடன்" பத்திரிகையின் வாசகர்களின் பெருக்கத்தால் 'திராவிட'னுக்கு வேண்டியிருந்ததாலும் கொஞ்ச நாளைக்கு "குடி அரசை" 16 பக்கத்துடனே வெளிப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும், இதனால் வாசகர்களுக்கு அதிகமான குறை ஏற்படாதிருக்கும் பொருட்டு இப்போது விளம்பரத்திற்காக உபயோகப்படுத்திவரும் சுமார் 7, 8 பக்கங்களை இனி 5 அல்லது 4 பக்கங்களுக்கு அதிகப்படாமல் செய்துவிட்டு, சற்றேறக்குறைய 12 அல்லது 13 பக்கங்களுக்கு குறையாத விஷயங்கள் வெளியாக்க உத்தேசித்திருக்கின்றோம். இதனால் ஒரு சமயம் விளம்பர வியாபாரிகளுக்குசற்று அதிருப்தி இருக்கலாம்; ஆனாலும் அவர்களையும் திருப்தி செய்ய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

குறிப்பு:—

நிருப நேயர்களுக்கு இனி கண்டிப்பாய் இடம் ஒதுக்க முடியாதற்கு வருந்துகிறோம். அவசியம் என்று தோன்றியவைகளுக்கு மாத்திரம் சற்று இடம் கொடுக்கலாம். ஆனாலும் நிருப நேயர்கள் வேறும் வர்த்தமானத்தை அனுப்பாமல் இருக்க வேண்டுகிறோம்.

கோபி தாலூக்கா போர்டு தேர்தல்.

கோபி தாலூக்கா போர்டுக்கு குரிச்சி பிச்சா அக்ரஹாரத்தினராக திரு.பூர்த்திரெட்டியார் பெரும்பான்மையான வோட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என ஒரு நிருபர் தந்தி மூலம் தெரிவிக்கிறார்.

1929-ம் ஆண்டின் தொழிலாளி பஞ்சாங்கம்.

இஃது திருச்சினாப்பள்ளி ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடத்தாரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதில் தொழிலாளர்களுக்காகச் சிறைசென்ற 12வீரர்களின் திருவுருவப்படங்களும், தமிழ்இங்கிலீஷ் தேதிகளும், கவர்மெண்டு விடுமுறை நாட்களும்தொழிலாளர்களுக்கானஎண்ணிறந்த-உளளத்தைக் கொள்ளை கொள்ளத்தக்க-சுயமரியாதை வாக்கியங்களும், ராகுகுளிகை காலங்களும், இந்து கிறிஸ்தவ பண்டிகை முதலியவைகளும், பஞ்ச வர்ணங்களில் கண்களைக் கவரத்தக்க விதமாய் காணப்படுகின்றன. பஞ்சாங்கம் ஒன்றின் விலை அணா 2 தான். வேண்டுவோர் "ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடம், திருச்சினாப்பள்ளி" என்ற விலாசத்திற்காவது, "ரயில்வே தொழிலாளர் அச்சுக்கூடம், காரை" என்ற விலாசத்திற்காவது எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். இப்பஞ்சாங்கத்தை ஏழைக்கு அன்பு கூர்ந்தனுப்பிய அச்சுக்கூடத்தாருக்கு எமது மனமார்ந்த வந்தனம்.

ஈரோடுசர்கிள் தேவஸ்தான கமிட்டி தலைவர் தேர்தல்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஈரோடு சர்கிள் தேவஸ்தான கமிட்டியின் கூட்டமொன்று ஈரோடு தாலூகா போர்டு ஆபீஸ் மீட்டிங் ஹாலில் கூடி திரு. ராய்பகதூர் கல்லதப்பி சர்கரை மன்றாடியார் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

பானக்கல் அரசருக்கு அநுதாபம்.

தலைவர் தேர்தல் முடிந்தவுடன் "பிரா மணரல்லாதார் இயக்கத் தலைவரும் இந்துமத தேவாலயங்களின் சீர்திருத்தத்திற்கு காணபுருஷருமான கனம் பனகால் ராஜா அவர்கள் திடீரென்று காலம் சென்றதில் எங்களுக்கு ஏற்பட்ட அதிதாபத்தை அவர் குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்" என்று தீர்மானம் செய்யப்பட்டது.

நாடார் மஹாஜன சங்கம், பட்டிவீரன்பட்டி.

நமது சங்கப் ஸ்பெஷல் கவுன்சில் மீட்டிங்கு 29-12-28ல் ம.ஆ 6-30 மணிக்கு பட்டிவீரன்பட்டியில் கூடைபெறும்.

ஆலோசிக்கப்பெறும் விஷயங்களாவன:—

1. நமது சங்கம் ஏழை மாணவர் ஸ்காலர் ஷிப் 2-வது லாட்டரி விஷயமாய் ஆலோசித்தல்,

2. விருதுநகரிலிருந்து கனம் நாயக்கர், முதன்மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் இவர்கள் விஷயமாய் வந்துள்ள கடிதங்களைக் குறித்து ஆலோசித்தல்,

3. காரியதரிசிகளால் கொண்டுவரப்படும் இதர விஷயங்களைக் கவனித்தல்,

4 அங்கத்தினர்கள்கொண்டுவரும் தீர்மானங்களைக் கவனித்தல்,

அங்கத்தினர்களுடைய கேள்விகளுக்கும் விடையளிக்கப்பெறும். காரியதரிசிகள்.

பனகால் அரசருக்கு அநுதாபம்.

மதுரை:— சென்ற 16—12—28 ல் பார்ப்பனரல்லாதாரின் மாபெருந்தலைவர் பனகால் அரசர் காலஞ்சென்றதை முன்னிட்டு இவ்வூர்வாசிகளின் துக்கத்தைக் காட்டும் அறிகுறியாக இன்று 17—12—28 தேதி இவ்வூர் நகரபரிபாலனகாரியஸ்தலமும் பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டன.

ஜூர். எஸ். நாயுடு சேர்மன்.

பட்டுக்கோட்டை:— பனகால் அரசர் திடீரென்று காலஞ்சென்றமையால் இந்நாடு அடைந்த அளவிலா நஷ்டத்தை உணர்ந்து இந்த பட்டுக்கோட்டை போர்டு ஹைஸ்கூல் ஆசிரியர்கள் சங்கம் மிக மிக வருந்துவதுடன் தனது ஆழ்ந்த அநுதாபத்தையும் அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது. காரியதரிசி.

ஈரோடு:— மாஜி மந்திரியும் பார்ப்பனரல்லாதார் தலைவருமாகிய பனகால் அரசர் திடீரென்று 16...12...28 ல் காலஞ்சென்றதை முன்னிட்டு ஈரோடு அலிசவுக்கில் 17—12—28 தேதி மாலை ஓர் பொதுக்கூட்டம் திரு. என், வெங்கட்டபெருமாள் நாயுடு பி. ஏ. அவர்கள் தலைமையில் கூடி ஏகமனதாக ஓர் அநுதாபத் தீர்மானம் செய்தது. எஸ்வரன்.

வாலாஜாபாத்:— 18—12—28 தேதி இந்துமத பாடசாலையில் பல பெரியார்களுடனும் மாணவர்களுடனும் கூட்டம் திடீரென்று கூடியது. திருவாளர் டப்ளியூ எஸ் முருகேச முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். திரு வா. தி. மாசிலாமணிமுதலியார் அவர்கள் நமது திரு பனகால் அரசரது நற்குணங்களையும் அவரால் அடைந்த நமது முன்னேற்றத்தையும் சென்னையில் அவர் உடனிருந்து கண்ட துயரக் காட்சியையும் மிகவும் மனத்துயரத்துடன் கூறி எல்லோரையும் துக்கக்கடலில் ஆழ்த்தினர். எங்களது அநுதாபத்தை அவரது உறவினர்கட்கும் திரு ஏ. ராமசாமி முதலியார் போன்ற பெரியார் கட்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அப்புண்ணிய பெரியாரது பிரிவுக்காக நமது இந்து மத பாடசாலை மாணவர்களுக்கும் விடுமுறையளிக்கப் பெற்றது.

பூனாமேடு:—உயர் திருவாளர், மாபெருந்தலைவர், தென்னாட்டு அரசியற் சிங்கம், அரசர் இராமராயநிங்கவாரு அவர்கள் திடீரென்று பிரிந்ததைகருதி பூனாமேடு பி. எஸ். ஜி. அண்சண்ஸ்விடுதி மாணவர் கழகத்தின் சார்பாக 18—12—28 ல் திரு ஆர். திரு வேங்கடசாமி அவர்கள் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நிகழ்ந்தது.

உயிர் துறந்த அரசரின் அருமைக்குடும்பத்தினர்க்கு தங்கள் துயரினைத் தெரிவித்துக் கொள்வதாகத் தீர்மானம் செய்யப் பெற்றது.

எஸ். என். சாந்து செட்டி.

சென்னை மாகாண
4 வது யாதவ மகாநாடு
திருநெல்வேலி.

நிகழும் 1928 ம் வருஷம் டிசம்பர் மீ 26, 27 ல் சென்னை மாகாண 4 வது யாதவ மகாநாடு திருநெல்வேலி ஹைரோடு, வி. யம். ஹைஸ்கூல் மேடையில் நடைபெறும். வேலூர் வக்கீல் திருவாளர் வி. கிருஷ்ணசெட்டி பி ஏ பி எல் அவர்கள் தலைமை வகிப்பார். ப சு துரைசாமி கோன்,
வரவேற்புக்கழகத் தலைவர்.

திரு நாயக்கர் உருவப்படத் திறப்பு விழா.

மதுரை ஜில்லா மேலூர் தாலூகாவைச் சேர்ந்தகொட்டாம்பட்டியில்25—12—28-வ மாலை 5-மணிக்கு 'குடி அரசு' பத்திராபதிபரும் சுயமரியாலதத் தலைவருமாகிய திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களின் திருஉருவப்படம் சிலகங்கை தாலூகா போர்டு பிரசிடெண்டும். ஹைகோர்ட்டு அட்வகேட்டுமாகிய திரு. எஸ். இராமச்சந்திரன் சேர்வை பி. ஏ. பி, எல். அவர்களால்திறந்து வைக்கப்படும்.

அவ்வமயம் திருவாளர்கள் பி. டி. ராஜன் ஊ; பு, அ. சௌந்தர பாண்டிய நாடார் 'குமரன்' பத்திராதிபர் செ. முருகப்பசெட்டியார், பிச்சப்பா சுப்பிரமணியன்செட்டியார் இன்னும் பல பெரியோர்கள் வருவார்கள். சுயமரியாலத, பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றம் முதலிய விஷயங்களைப் பற்றி பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் யாவரும் வந்து கேட்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்- G S. வேலு

தூத்துக்குடி.
வாலிபர் ஒற்றுமை சங்கம்

இவ்வூர் வாடித் தெரு வாலிப ஒற்றுமைச் சங்கம் வருடப்பூர்த்திக்கு திருவாளர்கள் ஜனகசங்கர கண்ணப்பா, சௌந்தர பாண்டிய நாடார், எஸ். தண்டபாணிபிள்ளை ஆகியவர்கள் 1—1—29-ல் விஜயம் செய்வதால் மேற்படியார்களைக் கொண்டு 2—1—29, 3—1—29, இவ்விரண்டு நாட்களிலும் பொது கூட்டம் நடத்துவதற்கும் வரவேற்பு ஊர்வலம் முதலிய ஏற்பாடுகளுக்கும் இவ்வூர் வாசிகள் தீவிரமான முயற்சி செய்து வருகிறார்கள். நகர்வாசிகளும் தலைவர்கள் வருகையை எதிர்பார்த்துக கொண்டிருக்கிறார்கள். எம், வைகுண்ட நாடார்.

விதவைப்பெண் தேவை.

நான் சைவ வேளாளர் மரபை சார்ந்தவன். எனக்கு வயது 30, சில்லரைக்கடை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்துவருகிறேன். எனக்கு இதுவரையில் கலியாணம் கிடையாது. எனக்கு 22ம் வயதில் ஏற்பட்ட ஓர் வியாதியால் சரிவர நன்றாக நடக்க முடியாது. ஆனால் நடக்க, எழுத, படிக்க, மற்றும் உள்ள சில்லரை வேலைகளும் செய்ய முடியும். நான் சுயமரியாதையை முன்னிட்டு விதவாவிவாகம் செய்துகொள்ள விருப்முள்ளவனாயிருப்பதால், சைவ வேளாளர், வேளாளர், நாயுடு இன்னும் மற்ற ஜாதியில் இருந்தாலும் சரி, 20வயதுக்கு மேற்படாத ஒரு விதவைப்பெண் தேவை.

இஷ்டமுள்ளவர்கள் நேரிலோ கடித மூலமாகவோ முழு விபரம் கீழ்கண்ட என் விலாசத்துக்கு தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். M. சுப்பய்யா, சில்லரைக்கடை வியாபாரம், புத்தூர், திருச்சி தாலூக்கா

மதராஸ் கவர்ன்மெண்டு பப்ளிக் டிபார்ட்மெண்டு அறிக்கை

மதராஸ் ஹைகோர்ட்டுக்கு நிரந்தமாக இன்னும் இரண்டு ஜட்ஜுகள் வேண்டுமென்பதையும் அவ்விரு ஸ்தானங்களுக்கு மிஸ்டர் ஜஸ்டிஸ் செய்லீ அவர்களின் நியமனத்தையும் ராவ்பகதூர் ஸி. வி. ஆனந்தகிருஷ்ணய்யாவர்களின் நியமனத்தையும், கனம் ஜஸ்டிஸ் தேவதாஸ் அவர்கள் ஸ்தானத்தில் டாக்டர் கிருஷ்ண பண்டலே அவர்களை ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருப்பதையும், கனம் ஸி. வி. ஆனந்தகிருஷ்ணய்யர் அவர்களின் ஸ்தானத்தில் கனம் அல்லாடி கிருஷ்ணசாமி ஐய்யர் அவர்களை அட்வகேட் ஜெனரலாக நியமித்திருப்பதையும் மாட்சிமை தங்கிய அரசர் பெருமான் அங்கீகரித்துவிட்டார்.

18-12-28, சென்ட் ஜார்ஜ் கோட்டை. } A. Y. G. கேய்பல்,
பிரதம காரியதரிசி.

தெம்மாப்பட்டு வைக்கம் வீரர் வாசகசாலை திறப்புவிழா.

இவ்வாசகசாலை ஸ்ரீமான் எம் ஆர் வீ ஆர் வீரப்பபிள்ளை அவர்களால் பள்ளிச் சாலைக்காக ஒதுக்கிதரப்பட்ட கட்டடத்தின் ஓர் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும் சமீபத்தில் திறப்புவிழாச் செய்யப்படுமென்றும் அதுபோழ்து பல அறிஞர்கள் விஜயம் செய்வார்களென்றும் திரு. சோமசுந்தரம் அறிவிக்கிறார்.

ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றுடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வாராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை ,, 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவ ரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டுப்பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை ஒழித்தல் என்பது இந்து சரிவர நிறைவேற்றப்பட்டது என்றுநான் ஒப்புக்கொள்ள முடியாது. அதற்கு மணமக்கள் காரணஸ்தர்கள் அல்ல. பெண்வீட்டார்களும் சுற்றத்தார்களும் சற்று மயங்கியதால் மணமக்களின் பெற்றோர்கள் ஒருவாறு இந்த அளவுக்குமாத்திரம் சம்மதிக்க நேர்ந்தது என்பதாக நான் அறிகிறேன். ஆனால் இதில் எனக்கு சற்றுவது திருப்தி இல்லாமல் போகவில்லை. அதாவது பார்ப்பான் உயர்ந்தவன் அவன்தான் மணச்சடங்கு செய்ய உரிமை உள்ளவன் என்கின்ற முட்டாள்தனமான எண்ணமும் உணர்ச்சியும் ஒழித்து பார்ப்பனரல்லாதாரைக்கொண்டே செய்வதில் முற்றுமில்லை என்கின்ற அளவுக்காவது ஏற்பட்டதை யத்திற்கும் கட்டுப்பாட்டிலுள்ளார்ச்சிக்கும் நான் ஒருவாறு திருப்தியும் எனது இடக்கத்தில் பிற்கால வாழ்வைப்பற்றியதை ரியத்தையும் கொள்ளமுடியவில்லை சிலர் இதை நினைக்கலாம் கலியாணம் என்று சொன்னார்களாம் அறியாமையாகும்

கிறிஸ்துவக் கலியாணமானால்தான் அதில் என்னகுற்ற அந்தமுறை கலியாணங்களில் அவர்கள் தம்பந்திகளாக அன்பும் காதலும் கொண்ட உத்தமர்களாக விளங்குவதை நீங்கள் பார்ப்பதில்லையா?

கல்யாண முறைகளில் அநேக விஷயங்களில் அவர்கள் முறை நமது முறைகளைவிட மேலானமுறைகள்என்று நான் தைரியமாய்ச்சொல்லுவேன். ஆனால் அதிலும் சில மூடநம்பிக்கைகளும் குருட்டுப் பின்பற்றுதலும் இருக்கின்றன என்பதையும் சொல்லாமலிருக்கமுடியவில்லை. திருஸ்துவமதத்தில் இன்னும் பறக்கிருஸ்தவன் பார்ப்பாரக் கிருஸ்தவன் ஆகிய பிரிவுகளையும் நீங்கள் பார்க்கலாம். ஆதலால் அதுவும் சிறப்பாக நம் நாட்டைப்பொருத்தவரை ஒரு வேஷ மதமே தவிர அறிவுமதம் என்று சொல்ல முடியாது.

சிலர் நாஸ்திகக்கலியாணம் என்று சொல்லுகிறார்களாம். அவர்களை நான் கண்டபடி திட்டி மடையர்கள் என்றும் சொல்லி அவர்களுக்காக நான் பரிதாபப்படுகிறேனல்லாமல் இது சமயம் வேறொன்றும் சொல்லுகிறதில்லை எனபது, ஆலோசிப்பவர்களின் சுயநலத்திற்கும் மற்றுப்பிழைப்புக்கும் எப்படி தேசியம் என்கிற சொல் உபயோகப்படுத்தப்படுகின்றதோ அதுபோலவே தமது சமூக ஸ்திரத்திற்கும் மதசம்பந்தமான வயிற்றுப்பிழைப்புக்கும் வியாபார மார்க்கமாகவும் அத்தியாவசிய முறையில் உபயோகப் படுத்தவும் ஒருசொல் என்ற சொல்லுவேன். இது இப்போழுது பெரிதும் முட்டாள்களுக்கும், தந்திரக்காரர்களுக்குமே ஆயுதமாக இருக்கின்றது.

ஆதலால் நீங்கள் அதைப்பற்றி கவலைப்படாதீர்கள் நீங்கள் உண்மையான "நாஸ்திகர்கள்" ஆனால் நமது சமூகமும் நாடும் விடுதலை அடையமுடியும் என்று நான் நம்பி இருக்கின்றேன்.

இன்றைய கலியாணத்தில் சில வடமொழி வாத்தைகள் வழங்கப்பட்டதால் கூட்டத்தில் இருந்த சில பெரியோர்களுக்கு ரொம்பவும் திருப்தி ஏற்பட்டதாம். ஆனால் நான் அவர்களை ஒன்று கேட்கின்றேன். அதாவது, அந்த வடமொழி வார்த்தையின் அர்த்தம் எதாவது தெரிந்து திருப்தி அடைந்தார்களா? அப்படியானால் அதன் அருத்தம் என்ன? மணமகனுக்காவதுமணமகளுக்காவது அர்த்தம் தெரிந்ததா? அப்படித் தெரிந்ததாகவே வைத்துக்கொண்டாலும் அவ்வர்த்தம்கொண்டமிழ்வார்த்தையோ தெலுங்கு வார்த்தையோ சொன்னால் ஆகாயம் இடிந்து விழுந்துவிடுமா?

